



# ஞானச்சுடர்

வைகாசி

மலர் 2005

ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


உ



# குறள் வழி

*ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப் புடைத்து.*

பொருள்- ஆமை தனது உறுப்புக்களை உள்ளே இழுப்பதுபோல ஒருவன் ஒரு பிறப்பில் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனாயின் அவனை அது இனிவரும் பிறப்பிலும் தீமையினின்றும் பாது காக்கும். (126)




# நற்சிந்தனை

## குதம்பாய்-5

தன்னை யறிந்தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில்
பின்னையினிப் பேசுவதென் - குதம்பாய்
பின்னையினிப் பேசுவதென்

நாமும் நாமாகி நமக்குள்ளும் நாமானால்
போமுன் வினையனைத்தும் - குதம்பாய்
போமுன் வினையனைத்தும்

பண்டுமின்று மென்றும் ஒருபடித்தாய் நிற்பவனைக்
கண்டுதொண்டு நாம்செய்வோம் - குதம்பாய்
கண்டுதொண்டு நாம்செய்வோம்.


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 89

2005 வைகாசி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| தீயோர் சொற்கேட்பதுவும்... | கா. கணேசதாசன் J.P. | 1 - 2 |
| மன உறுதி | சி. நவரெத்தினம் | 3 - 5 |
| ஆழ்வார்களின் அருளமுதம் | நா. சந்திரலீலா | 6 - 8 |
| ரிஷிகளுக்கும் கதை.... | ந. சிவபாதம் | 9 -10 |
| பழம் பெருமை வாய்ந்த.... | நீர்வை மணி | 11 - 12 |
| கந்தன் இனியன் | அ. துரை. அரங்கசாமி | 13 -16 |
| மனுநீதிச் சோழன் | சி. செல்லமுத்து | 17 - 18 |
| உலகை ஒன்றாகக் காண்... | கு. சோமசுந்தரம் | 19 - 20 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய... | சி. வேலாயுதம் | 21 -22 |
| இறைதொண்டும் இறை.... | இ. ஸ்ரீதரன் | 23 - 24 |
| அம்மா! அப்பா! என்றழைத்து... | அ. சுப்பிரமணியம் | 25 - 27 |
| தந்தை | கு. குணாளன் | 28 - 29 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 30 - 32 |
| நித்திய அன்னப்பணி.. | | 33 - 34 |
| மானுடத்தை மேன்மைப்.... | வ. குமாரசாமி ஐயர் | 35 - 38 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 39 - 40 |
| செய்திக்கொத்து | | - 41 |
| நக்கீரரின் இரு நூல்கள் | தி. பொன்னம்பலவாணர் | 42 - 43 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 44- 48 |



**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/=

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- *021-2263406*

**அச்சுப்பதிப்பு:-** சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

# ஞானச்சுடர்

## சித்திரைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சித்திரைமாத மலருக்கான வெளியீட்டுரையை சமாதான நீதவான் S. தேவதாசன் அவர்கள் மேற்கொண்டார்கள். ஞானச்சுடர் எட்டு வருடங்களாக வெளியிடப்பட்டுவரும் சிறப்பை அடியார்களுக்கு எடுத்துக்கூறியதுடன் வெளிநாடுகளுக்கும் ஞானச்சுடர் அனுப்பப்படுவதால் எமது சிறப்பை வெளிநாடுகளில் உள்ளவர்களும் விளங்கிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருப் பதையும் குறிப்பிட்டார்கள்.

ஞானச்சுடர் வெளியீட்டைப்போன்று ஆச்சிரமம் பல சமூக சேவைகளை மக்களுக்காக ஆற்றி வருவதையும் நாம் பார்க்கமுடிகிறது. இந்த வகையில் இங்கே இடம்பெறும் அனைத்துச் செயற்பாடுகள் பற்றியும் நாம் பெருமை கொள்ளவேண்டுமென்று திரு S. தேவதாசன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மதிப்புரையை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு கி. நடராசா அவர்கள் வழங்கினார்கள். ஞானச்சுடரின் 2005ம் ஆண்டு சித்திரைமாத மலருக்கான மதிப்பீட்டுரையாக மட்டுமல்லாமல் இதுவரை காலமும் வெளிவந்த அனைத்து ஞானச்சுடர்களின் ஒட்டுமொத்த மதிப்புரையாக அதிபர் அவர்கள் தனது மதிப்புரையை வழங்கினார்கள்.

கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்கு கீதா உபதேசம் செய்தது போல இந்த எட்டுவருட மலர்களிலும் பல அற்புதமான ஆத்மீகக் கருத்துக்களை எல்லாம் ஞானச்சுடர் எமக்கு வழங்கிவந்துள்ளது.

ஈஸ்வரனை மனதில் தியானிப்பதன் மூலமே மனதிற்கு சாந்தியும் நிம்மதியும் ஏற்படுகிறது. அவ்வாறு ஈஸ்வரனின்பால் நாட்டத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த மலர் வெளிவந்துகொண்டிருக்கிறது எனவும் அதிபர் திரு கி. நடராசா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எமது உடல் உறுப்புக்களில் ஒன்றில் குறை ஏற்பட்டால் அது செயற்படாது போய்விடும். அதனால் எமக்குத் துன்பம் ஏற்படுவதுடன் அந்த உறுப்பால் பயனும் கிடைக்காது போய்விடும். இவ்வாறு உடல் உறுப்புக்கள் எல்லாவற்றையும் சரியாக இயக்கி எமது வாழ்க்கையை வழிப்படுத்திச் செல்லுகின்ற இறைவன்மீது நாட்டம் கொள்ளச்செய்கின்ற பெரிய கைங்கரியத்தை ஞானச்சுடர் செய்துவருவதாகக் குறிப்பிட்டார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

மனிதனில் உள்ள வேறு எந்த அம்சங்களையும்விட அவனுடைய குணவியல்புகள் அல்லது பண்புகளே அவனுடைய அன்றாட செயற்பாடுகளையும் சமூகத்தையும் அதிகம் பாதிக்கக்கூடியவை. இந்தவகையில் மனிதர்களை மூன்று வகையினராகப்பிரித்து நோக்கப்படுகிறது.

மனிதர்களாக இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் மனிதப்பண்புகளில் இருந்து விலகி கீழ்த்தரமான சிந்தனைகளுடன் கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் முதலாவது வகை. இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் மனிதநேயத்துடன் மனிதப் பண்புகளுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இவர்கள் சராசரி மனிதர்களாக வாழ்ந்துகொண்டிருப்பார்கள். மூன்றாவது வகையினர் இவ்வுலகில் மனிதர்களில் தாமும் ஒருவராக வாழ்ந்துகொண்டிருந்தாலும் அவர்களது சிந்தனை செயற்பாடு அணுகுமுறை எல்லாம் மிக உயர்ந்த நிலையில் உள்ளதாயும் தன்னலம் கருதாது பிறர்நலம் கருதுபவர்களாகவும் தன் மகிழ்ச்சியைவிட மற்றவர்கள் மகிழ்ச்சியையே பெரிதாகக்கருதி வாழ்பவர்களாக விளங்குவர். இவர்கள் மனிதர்களாக இருந்தாலும் தெய்வப்பண்புள்ளவர்களாவர். இவர்களினுடைய செயற்பாட்டினால் சமூகத்தில் உள்ளவர்கள் தாமாகவே இவர்களை கை கூப்பி வணங்கும் வகையில் இவர்களது செயற்பாடுகள் அமைந்திருப்பதை நாம் காணமுடியும். திருவள்ளுவர் இவர்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் எனவும் இவர்கள் மனிதர்களாக இருந்தாலும் தெய்வங்களாக மதிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் பின்வரும் குறள்மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைத்து மதிக்கப்படும்"

கம்பராமாயணம் பாரதம் போன்ற காவியங்களில் இவ்வாறான தெய்வப்பண்புள்ள பாத்திரங்கள் பல எடுத்துக்காட்டப்பட்டிருப்பதையும் நாம் காணமுடியும். உதாரணமாக கம்பராமாயணத்தில் இராமன் பதின்னான்கு வருடங்கள் காட்டிற்குப் போய் வனவாசம் செய்யவேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டபொழுது இலட்சுமனின் தாயார் சுமித்திரை தனது மகனை நோக்கி வனவாசம் செய்வதற்கு செல்லும் இராமனுடன் நீயும் சென்று பதின்னான்கு வருடங்கள் அவனுடன் இருந்துவிட்டு வா என்றும் நீ இராமனுக்கு துணையாக, இராமனுக்கு காவலனாக அங்கே உனது கடமையை ஆற்றவேண்டுமென்றும் அதற்காக உனது உயிரை துறந்தாலும் பரவாயில்லை எனக்கூறுவது சாதாரணமாக எந்தத்தாயாலும் செய்யமுடியாத ஒரு உன்னதமான உயர்ந்த நிலையில் நின்று செய்த முடிவாகும். தன்னுடைய பிள்ளையின் மகிழ்ச்சிக்காக அல்லாது இன்னொரு தாயின் பிள்ளையின் துன்பத்தை போக்குவதற்காக மேற்கொண்ட மிகவும் உயர்ந்த ஒரு முடிவாகும்.

இந்தியாவில் பூமிதானம் என்ற செயற்பாட்டின்மூலம் காணி அற்றவர்களுக்கு காணிகளை சேகரித்து வளங்கும் செயற்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்த வினோபாவா, மற்றவர்கள் துன்பம் போக்குதல், நாட்டு மக்களின் விடுதலை என்பவற்றிற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்த மகாத்மா காந்தி போன்றவர்கள் மனிதர்களாக இருந்தாலும் தெய்வப்பண்புள்ளவர்கள் என்பதை நாம் மறுக்கமுடியுமா?. எமது வாழ்நாள் முழுவதையும் இல்லாவிட்டாலும் சில பொழுதுதன்னும் இவர்கள் போல் வாழ முயற்சிப்போமாக.

உ

# செல்வச் சந்நிதி முருகன்

அசைந்தாடும் மயிலொன்று கண்டேன் - அதில்
அழகன் முருகேசன் அமரவுங் கண்டேன்
இசைந்தாடு மவன்கையி லேந்தி - பகைக்கு
எதிராடும் அழகான வடிவேலைக் கண்டேன்
(அசை)

குழந்தைபோல் காட்டியங் கிருந்தான் - கொஞ்சம்
குறிப்பாகப் பார்த்திட முகமாறுங் கொண்டான்
வளந்தரும் முந்நான்கு தோளான் - வீர
வலுவான ஈராறு கரங்களோ டிருந்தான்
(அசை)

தலந்தோறு மாடல்புரிந் திடுவான் - அறத்தில்
சாராத சூரனை வேரோ டழித்தான்
நிலந்தோய உருண்டு வந்தார்க்கும் - அவன்
நிலையான பொருளோடு அருள் சேர்த்துவிடுவான்
(அசை)

தணியாத வறுமைநோய் வரினும் - எந்தன்
சந்நிதியாய் முருகேசா சண்முகா என்றால்
பிணியாமல் அவையகற்றி விடுவான் - சற்று
பிடியாகச் சிக்கென பிடித்திடின் வருவான்
(அசை)

வஞ்சகத் தார்க்கவ னஞ்சான் - தன்னை
வாடியடைந்தோர்க்கு வற்றாத அன்பன்
நஞ்சமாய்ச் சந்நிதி யமர்ந்தான் - அவனைச்
சார்ந்திடின் சகலதும் தந்துதாங் கிடுவான்
(அசை)

அன்னதானக் கந்த னென்றார் - அதை
ஆராய சந்நிதி ஆச்சிரமஞ் சென்றேன்
என்னஅதிசயம் அம்மா! - சபையில்
இருந்தபல் சபையெல்லாம் முருகனைக் கண்டேன்
(அசை)

முதுபெரும்புலவர்,
கலாபூஷணம், ஆசிரியர்,
*வை. க. சிற்றம்பலம்.*

உ

# வைகாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

P.T. பாலச்சந்திரன்
[அவுஸ்திரேலியா (வல்வை)]

**சி. ஜெய்வேந்திரம்**
(பிரான்ஸ்)

**தி. சந்திரபால்**
(பிரான்ஸ்)

**திரு திருமதி கந்தசாமி குடும்பம்**
(லண்டன்)

**கா. அருந்தவராசா**
(தொண்டைமானாறு)

**திரு சி. ஞானசுந்தரம் [ஞானம் கடை]**
(அச்சுவேலி தெற்கு)

**திரு இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால் மேற்கு)

**திரு சிவஆறுமுகசுவாமி J.P**
(ஜெகா பவனம் கொக்குவில்)

**திரு ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால்)

**திரு க. ஆனந்தராசா [அன்னைதாசன்]**
(அதிபர் உரும்பிராய்)

**திரு ம. புலேந்திரன்**
(இ. போ. ச. கரணவாய் வடக்கு)

**திரு இ. வேல்க்குமார்**
(லிகிதர் ப. நோ. கூ. ச மானிப்பாய்)

**செல்வி க. சிவநிதி**
(லிகிதர் ப. நோ. கூ.. ச மானிப்பாய்)

**திரு சு. கந்தசாமி**
(அருணா கிறீம்ஹவுஸ் நெல்லியடி, கரவெட்டி)

**திரு சி. க. கணபதிப்பிள்ளை**
(கொள்வனவு உத். வ. கி. வ. ப. ப. நோ. கூ. ச அச்சுவேலி)

**கனம் தலைவர்**

(ஆதிசக்தி படிப்பகம், ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை)

**திரு பொ. பாலசிங்கம்**

(களஞ்சியப் பொறுப்பாளர் வலிகிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி)

**கனம் தலைவர்**

(கலையரசி படிப்பகம் 3-ம் சந்தி, தொண்டைமானாறு)

**செல்வி அ. தர்ஷினி**

(லிகிதர் ப. நோ. கூ. ச. மானிப்பாய்)

**திரு S.R. புஞ்பநாதன்**

(பத்திரிகை விற்பனையாளர் பிரதான வீதி சங்கானை)

**லயன் வ. ஸ்ரீ. கனகராசா**

(செயலாளர் லயன்கிளப் வட்டுக்கோட்டை)

**திரு ம. நிர்மலதாஸ்**

(கிளை முகாமையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு ஸ்ரீ. ஸ்ரீராஜகோபால்**

(கிளை முகாமையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு S. சுகந்தன்**

(கிளை முகாமையாளர் உடு ப. நோ. கூ. சங்கம்)

**திரு சோ. பரமநாதன்**


(கிராம அலுவலர் குப்பிளான் தெற்கு)

**திரு வி. சிவபாலசிங்கம்**

(கரன் பான்ஸ்சி சுன்னாகம்)

**திரு R நந்தகோபால் (மில்க்வைற்)**

(கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்)



உ

# தீயோர் சொற் கேட்பதுவும் தீதே

திரு கா. கணேசதாசன் J. P. அவர்கள்



படைப்புத் தொழிலை ஏற்று நடாத்தும் பிரம்மாவின் புத்திரன் தக்கன். தந்தைசொல் மிக்க மந்திர மில்லை என்பதற்கமையத் தந்தையார் சொற்படி நடந்து ஞானமும் கல்வியும் பெற்றுச் சிவனை வணங்கிக் குறைவிலா இன்பங்கள் பெற்றான். பின்பு மதிமயங்கி ஆணவத்தாலும் விதியின் பயனாலும் சிவனை நிந்தித்து யாகம் ஒன்று செய்தான்.

நற்குணங்கள் பொருந்திய அமரர்களும் தக்கனின் சொற்கேட்டு நடக்கவேண்டியிருந்ததால் அவன்வழி சென்றனர். இதனால் சிவனது அம்ச மாகிய வீரபத்திரப் பெருமானால் தேவர்கள் முதலியோர் தண்டிக்கப் பட்டனர்.

இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் தீயவர்களின் சொற்படி நடந்தால் நல்லவர்களும் அல்லற் படவேண்டிவரும் என்பதே ஆகும். பின்பு அத்தேவர்கள் தாம் செய்த பாவங்களுக்காகச் சூரன் போன்ற அசுரர்களால் கொடிய துன்பமடைந்து, தம் பதவிகளைத் துறந்து துன்பப் பட்டனர். அவர்கள் காலம் செல்லத் தம் பிழைகளை உணர்ந்து முழுமுதற் கடவுளாகிய சிவனை அணுகி அருள் புரிந்து தம்மைக்காப்பாற்றுமாறு வேண்டிநிற்க, அவர் தனது நெற்றிக் கண் மூலம் அழகன் முருகனைத் தந்து அத்தேவர்களுடைய துன்பங் களைத் துடைத்து முன்னைய சுவர்க் கலோகப் பதவிகளைக் கொடுத் தருளினார்.

இதனால் நாம் அறியவேண்டி யது யாதெனில், தீமைகள் பிழைகள் புரிந்தவர்களும் மனம் திருந்தி நல்லுணர்வு கொண்டு இறைவனிடத்தே அடைக்கலமடைந்தால் அவலங்கள் தீரும் என்பதாகும்.

** பிறரை அளவுக்கதிகம் நம்புவதே பலர் அழிவுக்குக் காரணம். **

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள்
திருமுன்னுற்றால் தூய வராகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ"

என்ற உண்மையை உணர்ந்து பணிவுடன் செயலாற்றினால் எல்லா நன்மைகளும் சேரும் என்பது துணிபு.

இக்காலத்திலும் சிலர் தீயவர்களின் சொற்கேட்டு அல்லற் பட்டுச் செய்யவேண்டிய நற்செயல் களைச்செய்யாது துன்பப்படுகின்றனர். அவர்கள் நல்லோர் சொற்கேட்டு அறநெறிகளைக் கடைப்பிடித்து நற்செயல்களைச் செய்து நற்கதி பெறுவார்களாக.

## சுதந்திரனாக இரு....!



### விவேகானந்தரின் வாக்கு

ஒவ்வொரு ஆன்மாவும் உள் நிறைந்த தெய்வத் தன்மையுடையது. உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் இயற்கையை அடக்கி, உள்ளேயுள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே நோக்கமாகும்.


செயல், வழிபாடு, பிராணனைக் கட்டுப் படுத்துதல், தத்துவ ஆராய்ச்சி என்பவற்றுள் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, எல்லாவற்றினாலுமோ இதைச் செய்து சுதந்திரனாக இரு!

இதுவே சமயத்தின் முழு உண்மை. கொள்கைகளும் சடங்குகளும் நூல்களும் கோவில்களும் பிறவும் இதற்கு உதவி செய்யும் கருவிகளே!.

நாம் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள், எதையும் செய்யக்கூடிய ஆற்றல் நமக்கு உண்டு.

-சுவாமி விவேகானந்தர்-

உ



# மன உறுதி

திரு சி. நவரத்தினம் அவர்கள்

மன உறுதி என்பது எமது உள்ளத்தில் எழுகின்ற ஒரு எண்ணமோ அல்லது செயலோ அல்லது சிந்தனையோ, அவற்றின் மீது எந்தவிதமான தளம்பலோ அல்லது நம்பிக்கையீனமோ இன்றி இறுதிவரை நம்பிக்கையுடனும் திடசங்கற்பத்துடனும் இருத்தலேயாகும். மனம் ஒரு குரங்கு இதனை அங்கிங்கெனாதபடி ஒருநிலைப்படுத்த வேண்டும். மனத்தை அதன் போக்கிற் போகவிட்டால் ஏற்படுவது தீமையும் துன்பமும்தான். இந்த மன உறுதியை நாம் தியானம் செய்வதன் மூலம் பெற்று விடலாம். விஞ்ஞானிகளின் மன உறுதியினாற்றான் நாம் இன்று பல்வேறு புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். மாணவர்கள் தாம் தாம் கற்கின்ற துறையிலே வெற்றிபெற வேண்டுமாயின் தமது கற்றல் நெறிசார்ந்த பாடங்களைக் கற்பதில் அவர்களுக்கு ஆர்வமும், ஊக்கமும் விடாமுயற்சியும் மன உறுதியும் வேண்டும். நாம் இறைவனுடைய பாதாரவிந்தங்களை அடைய வேண்டின் பற்றற்றான் பாதார விந்தங்களை மன உறுதியுடன் பற்றிக் கொள்ள வேண்டும். இந்த உண்மையை நமது சமய குரவர்கள் தமது வாழ்வினூடாக எம்மத்தியில் நிலைநாட்டிச் சென்றுள்ளனர்.

திருநாவுக்கரசு நாயனார் இறைவனை அடைவதில் மிகவும் மன உறுதியுடன் நின்றார். அவர் நின்ற மார்க்கம் தாசமார்க்கமாகும். சமணர்கள் இவரை நீற்றறையில் வைத்தனர். நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்தனர். அவர் மீது யானையை ஏவினர். அவரைக் கல்லோடு கட்டிக் கடலிற்போட்டனர். இத்தகைய கொடுமைகளைக்கண்டு அவர் அஞ்சவில்லை பதிலாக மிகவும் மன உறுதியுடன் இறைவனின் பாதார விந்தங்களைப் பற்றிப்பிடித்தார். அதனால் சமணர்கள் செய்த கொடுஞ் செயல்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை. மாறாக இன்பத்தையே கொடுத்தன. மேலும் இறைவனுடைய கைலைக் காட்சியைக் காணவிரும்பிய நாவுக்கரசர் கைலைக்கு நடந்து செல்லத் துணிந்தார். செல்லும் பாதை கற்கள், முட்கள் நிறைந்த கரடு முரடான பாதையாக இருந்தது. அதனால் அவருடைய பாதங்கள் தேய்ந்து சிதைந்து இரத்தம் பெருகியது. ஆனாலும் அவர் மன உறுதியுடன் தவழ்ந்து சென்றார். மேலும் அவருடைய உடல் ஊறு பட்டது. ஆனாலும் அவர் சளைக்கவில்லை. தனது மன உறுதியை இழக்கவில்லை.

** நம்பிக்கை இல்லாத இடத்தில் அன்பு இருக்காது. **

"ஆளும் நாயகன் கைலைக்காட்சி கண்டல்லால் இந்த
மாளும் உடல் கொண்டு மீளேன்"

என்று மன உறுதியோடு தனது யாத்திரையைத் தொடர்ந்தார் நாவுக்கரசர். இறுதியாக இறைவனே அவர் மன உறுதியை மெச்சி அவருக்குக் கைலைக்காட்சியைக் காட்டியருளினார்.

மாணிக்கவாசகர் இறைவன்மீது வைத்திருந்த மன உறுதியின் காரணமாகத்தான் பாண்டிய மன்னன் குதிரை வாங்கக்கொடுத்த திரவியம் முழுவதையும் தனது குருவிடம் கொடுத்தார். இறைவன் மாணிக்க வாசகருக்காக நரிகளைப் பரிகளாக் கினார். பாண்டிய மன்னன் மாணிக்க வாசகரைச் சுடுமணலில் நிறுத்தி அவரது நெற்றியிலே கல்லையும் வைப்பித்தான் ஆனால் அவர் இறைவனை மன உறுதியோடு பற்றிய தால் இறைவன் வைகைநதியைப் பெருகச்செய்து அவரது துன்பத்தைப் போக்கினார்; தானாகவே வைகை நதிக்கு அணைகட்டுவதாகப் பிட்டுக்கு மண்சுமந்து கூலியாளானார். பிரம்படி பட்டார். எனவே மாணிக்கவாசகர் இறைவனின் பாதங்களை மன உறுதியோடு பற்றியதாற்றான் இறைவன் இவர்பொருட்டுப்பல துன்பங்களை அனுபவித்துள்ளார்.

பிராமணனிடம் அடிமையாக வேலை செய்த நந்தனார் சிதம்பரம் சென்று நடராசமூர்த்தியைத் தரிசிக்க வேண்டும் என்ற மன உறுதி உடையவராக விளங்கினார். அப் பிராமணரோ இவரைச் சிதம்பர தரிசனம் செய்ய விட்டபாடில்லை. காரணம் இவர் ஒரு புலையன் என்பதனாலாகும். ஆனால் நந்தனாரோ நாளை போவேன் நாளை போவேன் என்று தன்னிடம் கேட்பவர்கள் யாவருக்கும் கூறிவந்தார். நந்தனின் கரைச்சலைத் தாங்கமுடியாத அந்தணர் அவரிடத்தில் ஒரு நிபந்தனையை வைத்தார். அதாவது தனது வயலை ஒரே நாளில் விதைத்துக் களைபிடுங்கி நீர் இறைத்து அறுவடையையும்செய்து முடித்துவிட்டு நீர் சிதம்பர தரிசனத்துக்குச் செல்ல லாம் என்பதாகும். நந்தனின் மன உறுதியைக்கண்ட இறைவன் தன் அருளால் வயல்வேலை முழுவதையும் ஒரேநாளில் நிறைவேற்றி வைத்தார். இவ்வற்புதத்தைக்கண்ட அந்தணர் திகைத்துப் போனார். இறைவன் அருளே என்று நினைத்து நந்தனைச் சிதம்பர தரிசனம் செல்லவிடுத்தார். இதுமட்டுமல்ல மூலஸ்தானத்தை மறைத்திருந்த நந்தியையும் நந்தன் விலகச்செய்தார். இவற்றுக்கெல்லாம் காரணம் நந்தனின் மன உறுதியே யாகும்.

அரிச்சந்திரன் தன் வாழ்க்கை யில் உண்மையே பேசவேண்டுமென்ற மன உறுதியுடன் வாழ்ந்து வந்தான். இவனது மன உறுதியைக் குலைக்க விஸ்வாமித்திர முனிவர் இவனுக்குப் பல சோதனைகளையும் துன்பங்களை யும் கொடுத்தார். ஆனால் அரிச்

சந்திரனோ தன் மன உறுதியிலிருந்து சற்றும் தவறவில்லை. முடிவிலே எல்லாம் நலமே நிறைவெய்தின. இந்த நாடகத்தைப் பார்த்த காந்தியடிகளும் உண்மையே பேசவேண்டுமென்ற மன உறுதியோடு வாழ்ந்தமையினாற்றான் இன்றும் நாம் காந்தியடிகளை நினைவு கூருகிறோம்.

மகாபாரதக்கதையிலே கன்னன் தன்னிடம் இரப்போர்க்கு இல்லை யென்னாது கொடுப்பதையே தன் மன உறுதியாகக்கொண்டு வாழ்ந்தான். மகாபாரதப்போரும் வந்தது. இந்தப் போரினால் அவன் எல்லாவற்றையும் இழந்து போர்க்களத்தில் இறக்கும் தறுவாயிற் கிடந்தான். அப்பொழுது வயோதிபப் பிராமணவடிவில் வந்த கிருஷ்ணபரமாத்மாவுக்குத் தான் செய்த தர்மப்பலன்கள் அனைத்தை யும் தாரைவார்த்துக்கொடுத்துவிட்டு இறந்தான். இதனாலன்றோ கொடைக் குக் கன்னன் என்று தற்பொழுதும் நாம் பேசிவருகின்றோம்.

துரோணாச்சாரியாரையே தன் குருவாகக்கொண்டு வில்வித்தை கற்க வேண்டுமென்ற மன உறுதியோடு வாழ்ந்த ஏகலைவன் துரோணச்சாரி யாரைச் சந்தித்து அவரிடம் வில் வித்தையைப் பயில விழைந்தான். அவ் வேண்டுகோளைப் பஞ்சபாண்டவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். காரணம் ஏகலைவன் ஒரு வேடனாக இருப்பதனாலும், அக்கால வழக்கப்படி அரச குமாரர்களுக்கே துரோணர் வில்வித்தையைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுமேயாகும். எனவே ஏகலைவனுக்கு வில்வித்தை கற்பிக்கத் துரோணர் மறுத்துவிட்டார். ஆனாலும் ஏகலைவன் தன் மன உறுதியினால், காட்டில் துரோணாச் சாரியாரின் உருவச் சிலையை அமைத்து அவரைத்தன் குருவாக மதித்து வில்வித்தைகள் முழுவதை யும் கற்றுப் புகழ்பெறவில்லையா!

மேலும், மன உறுதி சார்ந்த இன்னும் பல எடுத்துக்காட்டுக்களைக் கூறிக்கொண்டே போகலாம். ஆதலால் மனிதர்களாகிய நமக்கு இவ்வரிய மானுடப்பிறவி கிடைத்திருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முருகப்பெருமானது பாதார விந்தங் களை மன உறுதியோடு பற்றிப்பிடித்து அவன் இன்னருளைப் பெற்று உய்தி பெறுவோமாக.

### "நிவேதனம்" என்றால் என்ன?



நிவேதனம் என்றால் சுவாமியைச் சாப்பிடச்செய்வது என்பது பொருளல்ல. "நிவேதயாமி" என்றால் "அறிவிக்கிறேன்" என்றே பொருளாகும். "பகவானே, இந்த வேளைக்கு உன் கருணையால் எனக்கு இந்த உணவு கிடைக்கிருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றி" அன்று அறிவித்துவிட்டுக் கடவுளின் நினைவுடன், நன்றி உணர்வுடன் உண்ண வேண்டும். நமக்குக் கிடைப்பது எல்லாமே பகவான் கொடுத்தது. அதை அவரிடமே காட்டி, நன்றி சொல்லி அனுபவிப்பதில் என்ன தவறு?

- ஸ்ரீ ரமண வாக்கு-

இன்று முடியக்கூடியதை நாளைக்குத் தள்ளிப்போடாதே.

உ



# ஆழ்வார்களின் அருளமுதம்

திரு சந்திரலீலா நாகராசா அவர்கள்

கருணைக்கடலான விஷ்ணு பகவான் மக்கள் உய்யும் பொருட்டு ஆழ்வார்களையும், ஆச்சார்ய புருஷர் களையும் திருஅவதாரம் செய்வித்தார். இத்தகையோர் வைணவ சமயத்தின் ஆதார சுருதியாவர். இவர்கள் பன்னிரு வர். எம்பெருமானின் கல்யாண குணங் களில் ஊறி ஆழ்ந்தவர்கள் என்பதால் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் அனந்தசயனனை அகக் கண்ணாற் கண்டு தோத்திரங்களாகப் பாடினர். இவற்றின் தொகுப்பே நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் எனப்படும். இதிலுள்ள கருத்துக்களை விளக்கி எமக்கு அருளியோர் ஆச்சார்யர் களாவர். இந்து சமயத்தில் ஆறுவகை யான சமயங்களும், ஒவ்வொரு தெய்வத்தை முழுமுதற் பொருளாக நிறுத்தி வணங்கி வருகின்றன. சைவம்- சிவன்; சாக்தம்- சக்தி; சௌரம்- சூரியன்; வைணவம்- விஷ்ணு; காணபத்தியம்- கணபதி; கௌமாரம்- முருகன்.

ஆழ்வார்கள் தமிழ் நாட்டின் புண்ணிய நதிக்கரையில் அவதரித்தனர். முதலாழ்வார்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் பாலாற்றருகே அவதரித்தனர். நம்மாழ் வாரும், மதுரகவியாழ்வாரும் தாமிர நதிக்கரையில் அவதரித்தனர். பெரியாழ் வாரும், ஆண்டாளும் கிருதமாலையரு கில் தோன்றினர். தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திரு மங்கையாழ்வார் காவிரிக்கரையிலும், மேலாற்றில் குலசேகர ஆழ்வாரும் தோன்றினர். பொய்கையாழ்வார் காஞ்சி புரத்தில் ஒரு பொற்றாமரைக்குளத் திலுள்ள தாமரை மலரில் திருமாலின் பாஞ்சசன்னியம் எனும் சங்கின் அவதாரமாகத் தோன்றினார். பிறந்து வளர்ந்து இளமைப்பருவத்தை அடைந்து கற்கவேண்டியவற்றைக் கற்று, உலக வாழ்வை வெறுத்துப் பகவான் மேல் தீராத பக்திகொண்டு நூறு பாசுரங்களால் பாடினார். இவர் பாடியது முதல் திருவந்தாதி எனப்படும்.

பூதத்தாழ்வார் மாமல்லபுரத்தில் ஒரு மல்லிகைப் புதரின் நடுவே நீலோற்பல மலரில் திருமாலின் கௌமேதகி எனும் கதையின் அம்ச மாக அவதரித்தார். இவரது உள்ளம் இவ்வுலக இன்பத்தை நாடாது சதா எம்பெருமானையே தியானித்துக் கண்ணீர் மல்கியவராய் நூறு பாசுரங் களைப் பாடினார். இவர் பாடியது இரண்டாந்திருவந்தாதி ஆகும். பேயாழ்வார் மயிலாப்பூரில் உள்ள கிணற்றிலுள்ள செவ்வல்லிப்பூவில் பகவானின் நாந்தகம் எனும் வாளின் அம்சமாக அவதரித்தார். இவரும்

திருமாலிடம் இடையறாத பக்தி பூண்டு அவர் நாமங்களை உச்சரித்துக் கொண்டிருப்பார். "எப்போதும் என் நா செங்கண் மால், எங்கள் மால் என்று சொன்ன நாளே நாளாகும்". இவர் ஒப்பாரும், மிக்காருமில்லாத திருமாலின் திருவடிகளைத் தொழுதார். இவர் இயற்றிய நூறு பாசுரங்கள் மூன்றாந் திருவந்தாதியாகும்.

கர்ப்பவாசமின்றி மலரிலே தோன்றிய இம்மூவரும் ஒருநாளிருந்த ஊரில் மறுநாள் தங்காது ஊர் ஊராகத் திரிந்து அவன் புகழ் பாடிக் களிப்புற்று வந்தனர். ஒரு சமயம் மூவரும் திருக்கோயிலூரை அடைந்தனர். பகவான் இவர்களை ஒன்று சேர்க்க விரும்பினார். இரவு நேரம் தங்குவதற்கு ஏற்ற இடம் எங்கிருக்கென்று தேடிவந்த பொய்கை யாழ்வார் விஷ்ணு பக்தர் ஒருவரிடம் வந்து தங்க அனுமதி கேட்டார். அடியார்களிடம் அன்பு பூண்ட அவரும் தன்வீட்டின் முற்பகுதியிலுள்ள இடைக் கழியைக் காட்டினார். அவரும் படுத்துறங்கினார். சிறிது நேரத்தின் பின் பலத்த மழை பெய்தது. அப்பொழுது அங்கு வந்த பூதத்தாழ்வார் தானும் தங்குவதற்கு இடமளிக்குமாறு கேட்டார். ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம் என்று கூறிநின்று பூதத் தாழ்வாருக்கு இடமளித்தார். பின்பு பேயாழ்வாரும் அங்கு வருகைதரவே ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் எனக் கூறி மூன்றுபேரும் நின்றனர். அப்போது இம்மூவருடன் பகவானும் நெருக்கமாக நின்று அசைய இயலாதபடி நெருக்கினார். இருட்டிலே தங்களைத் தவிர நிற்பது யாரென்பதை அறிய விரும்பி ஞானச்சுடர் விளக்கை ஏற்றி எம்பெருமானை அகக்கண்களால் தரிசித்து, நூறு பாடல்களைப் பாடினர். பொய்கையாழ்வார் பின்வரும் பாடலைப் பாடினார்.

"வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய சுடரே விளக்காக - செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்கவே யென்று"

பூதத்தாழ்வாரோ,

"அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

என்று பாடினார்.

பேயாழ்வார் பாடியது,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
அருக் கன் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்

பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று"

திருமழிசை எனும் ஊரில் பகவானின் சுதர்சனம் சக்கரத்தின் அம்சமாகத் திருமழிசையாழ்வார் அவதரித்தார். பார்க்கவர் முனிவர் யாகம் செய்யும்போது மனைவி கனகாங்கி கருவுற்றுப் பன்னிருமாதம் கழியப் பிண்டமொன்றைப் பிரச வித்தாள். அதைப் பிரம்புப் புதரில் வைத்துப் போயினர். திருமகள் அருளினால் சகல அவயவமும் வளரப் பெற்று பசியால் அழவே பகவான் அனுக்கிரகம் செய்து திருவுருவைக் காட்டி மறைந்தார். பிரம்பு அறுக்கவந்த திருவாளன் குழந்தையைக் கண் டெடுத்து மகப்பேறு இல்லாத தனக்குப் பகவான் அளித்த பரிசு என எண்ணித் தன் மனைவியிடம் தந்தான். அவளும் பாலூட்ட அதைக் குடிக்க மறுத்தது. ஆனாலும் குழந்தை வளர்ந்தது. இதைக் கேள்வியுற்ற முதியவர் ஒருவர் திருமாலின் பக்தர். அவருக்கும் குழந்தையில்லை. குழந்தைக்கு முதியவர் பாலைக் கொண்டுவந்து இப்பாலை அமுதுசெய்ய வேண்டும் என வேண்டவே, குழந்தையும் பருகியது. தினமும் பால் கொண்டு வந்து கொடுத்தார். முதியவருடைய பிள்ளையில்லாக் குறையை நீக்கத் தான் அருந்திய பாலில் மீதி வைத்து அவர்களிருவரும் அருந்தச் செய்தார். அவர்களும் முதுமையகன்று, மனைவி கருவுற்று ஓர் ஆண்மகவு உதித்தது. கணிகண்ணன் எனப் பெயரிட்டு வித்தைகளைக் கற்பித்தனர்.

திருமழிசையாழ்வாரும் வேறு சமய நூல்களைப் படித்துப் பின்பு சைவ சமயத்திற்கு மாறித்தனது பெயரைச் சிவவாக்கியர் என மாற்றியவராய்த் தலங்களைத் தரிசித்து, மயிலையை அடைந்து பேயாழ்வாரைச் சந்திக்க அவர் முத்தி அளிக்கும் முதல்வன் திருமால் என உணர்த்தி வைணவத்திற்கு மாற்றி னார். கணிகண்ணனும் இவருக்குச் சீடனாகித் தொண்டு செய்தான். பின் ஆழ்வார் குடந்தை சென்று ஆராவமுதனை வணங்கித் தான் பாடிய பாடல் ஓலைகளைக் காவிரி நதியில் விடவே அவை நீரைப் பிளந்து எதிர்த்து வர அவற்றை எடுத்து உலகிற்கு உபகரித்தருளிப் பல்லாண்டு யோகத்திலமர்ந்து முத்தியடைந்தார். இவர் இயற்றிய நூல்கள் நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்பன.

(தொடரும்.

பெண், பொன், மண் என்ற ஆசைகளை வளர்ப்பதால் கூடவே
துன்பமும் வளரும். அவற்றிலிருந்து விடுபட்டால்
இன்பம் வரும்.

** புத்திசாலி இல்லாததற்கு ஏங்க மாட்டான். **

உ



## ரிஷிகளுக்கும் கதை சொல்லத் தெரியும்

# யார் சிறந்தவன்

திரு ந. சிவபாதம் (புத்தொளி) அவர்கள்

இது ஒரு நீதிக்கதை. அர்த்த புஷ்டியானது சிந்திக்கவைப்பது. மூச்சு - பேச்சு - நோக்கு, செவிப் புலன் - மனம் ஆகிய ஐந்தும் ஒரு முறை யார் சிறந்தது எனத்தங்களுக் குள் விவாதித்துக் கொண்டன. ஒவ்வொன்றும் தானே பெரியவன் தானே பெரியவன் எனப் போட்டியிட்டுக் கொண்டன. பின்னர் தங்களது பிதா வாகிய பிரஜாபதியை அடைந்து தங்கள் கருத்தைக்கூறித் தங்களில் யார் சிறந்தவன் எனக் கேட்டன.

உங்களில் யார் உடலைவிட்டு நீங்குவதால் அதிக துன்பம் நேருகிறதோ அவனே சிறந்தவ னென்றார் பிரஜாபதி. தந்தை கூறியதைப் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கின. பேச்சு வெளியே சென்று ஓராண்டு வசித்துவிட்டுத் திரும்பியது. உடலே "நான் இல்லாமல் நீ எப்படி வாழ்ந்தாய்" என்று கேட்டது. ஓரளவு நன்றாகவே வாழ்ந்தேன். ஊமையாய்ப் பிறந்தவர்களைப் போல் மூக்கினாற் சுவாசித்தும் கண்ணாற் கண்டும் காதாற் கேட்டும் மனத்தாற் சிந்தித்தும் வாழ்ந்தேன் என்றது உடல்.

நோக்கு வெளியேறி ஓராண்டுக்குப் பின் திரும்பியது. நான் இன்றி நீ எப்படி வாழ்ந்தாய் என உடலைக் கேட்டது. குருடர்களைப் போல் வாழ்ந்தேன். பார்வையில்லை. அவ்வளவு தான் மற்றப்படி சுவாசித்துக் கொண்டும் பேசிக்கொண்டும் கேட்டுக்கொண்டும் சிந்தித்துக் கொண்டும் சுகமாகவே வாழ்ந்து கொண்டேன் என்றது உடல்.


செவிப்புலன் வெளியேறியது. ஓராண்டுக்குப் பின் திரும்பிவந்து "உடலே நான் இல்லாமல் நீ எப்படி வாழ முடிந்தது?" என்று கேட்டது ஓ அதுவா! நீ இல்லாவிட்டால் என்ன சுவாசித்தும் பேசியும் கண்டும் சிந்தித்தும் வாழ்ந்தேன். கேட்கமட்டும் முடியவில்லை. செவிடர்கள் போற் சீவித்தேன் என்றது உடல். மனது வெளியே சென்று ஒருவருடம் வாழ்ந்தது. திரும்பி வந்து மற்றவர்கள் கேட்டது போல் உடலைக் கேட்டது. குழந்தை போல் வாழ்ந்தேன். சுவாசித்தேன் கண்ணாற் கண்டேன். காதாற் கேட்டேன் சிந்திக்கமட்டும் முடியவில்லை. அவ்வளவு தான் என்றது உடல். போட்டியிற் கலந்து கொண்டவர்களிற் கடைசியாக நின்றது மூச்சு. மூச்சும் வெளியேறத் தயாரானது. மூச்சு வெளியேற முயலும் போதே ஏனைய பிராணன்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து தங்களைக் கிழித்து

மிச்சம் வைக்காத இடத்தில் எதுவும் நிரம்பாது.

இழுப்பதுபோல் துன்பமடைந்தன. கட்டி வைத்த முளைக் கயிற்றின் ஆணி களைப் பிடுங்கிக் கொண்டு உத்வேக முள்ள குதிரை கிளம்புவது போல் மூச்சானது தங்களையும் இழுத்துக் கொண்டு செல்வதாக ஏனைய பிராணன்கள் சகிக்கமுடியாத நிலையை அடைந்தன.

வேண்டாம் வேண்டாம் போகாதே போகாதே என்று அவை ஒன்றாக அலறின.

"நீயே சிறந்தவன்; நீயே சிறந்தவன்; எங்களுடைய சிறப்புக் களெல்லாம் உன்னுடையனவே" என்றன.



03- 04- 2005 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற சிவத்திரு வ. குமாரசாமி ஐயரின் மணிவிழா நிகழ்வின்போது குமாரசாமி ஐயருடன் அவரது துணைவியாரும் நல்லை ஆதீன முதல்வரும், பேரவைப் போஷகருள் ஒருவரான சோ. தண்டபாணிக தேசிகரும், பேரவை உறுப்பினர்களும் மேலே உள்ள படத்திற் காணப்படுகின்றனர்.

## வைகாசிப் பெருவிழா

வருடா வருடம் நடைபெறும் வைகாசிப் பெருவிழா 20- 05- 2005 வெள்ளிக்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனது அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்திற் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

உ

# பழம் பெருமை வாய்ந்த புராணங்களே! மக்கள் வாழ்விற்கு நல்வழிகாட்டுவன

திரு நீர்வை மணி அவர்கள்

இறைவழிபாட்டில் நம்பிக்கை வைப்பதற்கும் வாழ்வில் நல்வழி நாடுவதற்கும் புராணங்களே உறுதுணை புரிகின்றன. எத்தனை! எத்தனை! அரும்பெரும் தத்துவங் களையும், பக்தி ததும்பும் தெய்வீகச் சிந்தனைகளையும், அறிவுக்கு விருந் தாகும் பலவிதகதைகளையும் இலகு வாகவும், எளிதாகவும், சுவாரஸ்யமாக வும் புராணங்கள் எமக்குப் புரிய வைக்கின்றன.

கல்வியறிவு, வாசிப்பு இல்லாத பாமரமக்களுக்கெல்லாம் புராணக் கதைகளும், புராணபடனங்களும் வாழும் முறைகளையும், நல்லொழுக் கச் சிந்தனைகளையும் நன்கு எடுத்துக்கூறி மனத்திற்பதிய வைக்கின்றன. புராணக்கதைகள் பல மக்களுடைய மனச்சாட்சியையே தட்டி எழுப்பித் தூண்டிப் பாவ, புண்ணியங்களையும், அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் நன்கு உணர்த்துகின்றன. இவ்வுணர்வினால் சிந்தனையில் நல்ல மாற்றங்கள் ஏற்படுவதை நாம் காணவும் கேட்கவும் முடிகின்றது.

இந்து மதத்திலே உள்ள ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்பு முதல் இருந்துவரும் புராணங்கள் பலவற்றையும் கற்பனை எனவும், கட்டுக்கதைகள் எனவும் கூறுபவர்கள் அவற்றில் உள்ள தத்துவங்களையும் அவை எப்படி மக்களுக்கு நல்வழி காட்டிகளாக உள்ளன என்பதையும் நன்கு ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பார்களா னால் அப்புராணங்களின் அருமை, பெருமை நன்கு புலப்படலாம்.

நுட்பமான பல தத்துவக் கோட்பாடுகளை மிக எளிமையாகவும், இரசனையுடனும் புரியவைத்துத் தெய்வங்களை மக்களுக்கு மிக, மிக அன்னியோன்யமானவர்களாக்கி, மக்கள் தம் சுயசிந்தனை மூலம் தங்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், வாழும் முறையை நல்லபடி அமைத்துக் கொள்ளவும் உதவுபவை அவரவர்கள் கேட்ட, அறிந்த, படித்த புராணக்கதைகள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏட்டில் எழுதாத கேள்விஞான மாகப் பெறப்பட்டவை வேதங்கள் எனச் சான்றோர் கூறுவர். இந்த வேதங்கள் நால்வகையாக இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வகுக்கப்பட்டுள்ளன. இந்த நால்வேதங்கட்கு அடுத்த படியாகப் புராணங்களைப் பெரியோர் போற்றுகின்றனர்.

பழைமை, பெருமை மிக்க புராணங்கள் பிரமபுராணம், பத்ம

புராணம், விஷ்ணுபுராணம், சிவபுராணம், பாகவதபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேய புராணம், அக்னிபுராணம், பவிஸ்ய புராணம், பிரம்மகைவர்த்தபுராணம், ஸ்கந்தபுராணம், வாமனபுராணம், மத்ஸ்யபுராணம், கூர்மபுராணம், கருட புராணம், பிரம்மாண்டபுராணம், எனப் பதினெண் புராணங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றைவிட பதினெண் உப புராணங்களும் உள்ளன.

புராணங்கள் பலவும் உலகத் தோற்றம், உலக அழிவு முதலிய பஞ்சலக்கணங்களையும் கூறியுள்ளன. இன்றைய வானசாஸ்திர நிபுணர்கள், பிரபஞ்ச ஆராய்ச்சியாளர்கட்கெல்லாம் எமது புராணங்கள் பெரும் புதைபொருள் ஆராய்ச்சிகளாக விளங்குகின்றன. இந்து சமயத்தவர்களின் பூர்வீகச் சொத்துக்களாகவும் கிடைத்தற்கரிய அரும்பெருஞ் செல்வங்களாகவும் விளங்குவன புராணங்களேயாகும். அள்ள அள்ளக் குறையாத அரிய பல சிந்தனைகளை எமக்குத் தந்துகொண்டிருப்பவை இப் புராணங்களாகும். மேலைத்தேச அறிஞர்கள் பலரும் எமது புராணங்களை ஆராய்ந்து, உட்பொருளையும், உண்மைத் தெளிவுகளையும் பெற முனைகின்றார்கள். நாகரிக வளர்ச்சி என்றும் விஞ்ஞான வளர்ச்சி என்றும் பிதற்றிக் கொள்பவர்களால், எமது பண்டைய புராணங்கட்கு ஈடான ஒரு ஆக்கத்தை உலகுக்குத் தரமுடியா திருப்பது, எமது புராணங்கட்குரிய போற்றற்கரிய தனிப்பெரும் அற்புதச் சிறப்பாகும். எனவே இப்புராணங்களைப் பேணிப் பாதுகாப்பது இந்துக்கள் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். பழம் பெருமைவாய்ந்த கந்த புராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கருடபுராணம், திருவாதவூரர் புராணம் போன்ற பலவும் மக்களுடைய வாழ்விற்கு எத்தனை! எத்தனை! அற்புதமான அநுபவங்களையும், தத்துவங்களையும், வாழ்க்கைப்பாடங்களையும் தெரியவைக்கின்றன. பழைமை, பழைமை என்று பிதற்றுபவர்கள் பழைமையுட் புதைந்திருக்கும் அரும்புதையல்களை அறியாத மூடர்களேயாவர்.

கற்றறிந்த ஆன்றோர் புராணங்களின் வழிகாட்டுதல்களை நன்கு தெரிந்தே, மக்களும் அதனை வாழ்க்கையின் தேவையறிந்து இன்புற்று நல்வாழ்வு நாடவேண்டிய ஆலயங்கள்தோறும் காலத்திற்குக் காலம் புராணபடனங்கள் நடாத்த முன் நிற்கின்றனரெனலாம். நாவலர் காலத்திலிருந்தே யாழ்ப்பாணம் கந்தபுராணக் கலாச்சாரத்தில் திளைத்திருந்ததாகச் சமயப் பெரியார்கள் கூறுவார்கள். எமது ஆலயங்களிற் கந்தபுராணம் மட்டுமன்றி பெரியபுராணம், திருவாதவூரர் புராணம், திருவிளையாடற்புராணம் போன்றனவும் படித்துப் பயன் சொல்லி வழிபாடுகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் உள்ள நல்ல கருத்துக்களை வாழ்க்கையிற் கடைப்பிடிப்போமாக.

உ



# கந்தன் இனியன்

டாக்டர் மொ. அ. துரை. அரங்கசாமி M.A, M.O.L, Ph.D. அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர் மதுரை பல்கலைக்கழகம் மதுரை- 2)

கந்தன், முருகன், சேயோன், செவ்வேள், வேலோன், நெடுவேள் முதலியன ஒரேபொருள் உணர்த்தும் பெயர்களாகும். இப்பெயர்களுள் சிறந்ததும் தலையாயதும் கந்தன் எனலாம். கந்த என்பதன் பொருள் இனியது. எனவே, கந்தன் இனியவன் என்று கூறிவிடலாம்.

'கந்து" என்ற சொல்லடியாகப் பிறந்த பெயரே கந்தன் என்பது. தமிழ் நூல்களுள் மிக்க பழைமையானதும் தலைமையானதுமான தொல்காப்பியத் திலேயே கந்து என்ற சொல், 'கந்தழி' (தொ. பொ., 88) என்ற தொடரில் ஆளப்பெற்றிருத்தலைக் காணலாம். ஈண்டுக் 'கந்து' என்பது பற்றுக்கோடு என்று பொருள்படுவதாகும். 'காதன்மை கந்தா' (திருக்குறள், 507) என்ற தொடரில் 'கந்து' என்பதைப் பற்றுக் கோடு என்ற பொருளிலேயே திருவள்ளுவர் ஆண்டுள்ளார். 'வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்' என வரும் பட்டினப்பாலை அடியில் (வரி, 249) 'கந்து' என்பது 'தெய்வ முறையும் தறி' என்ற பொருளில் வந்துள்ளது. 'கந்துடை நிலை' என வரும் திருமுருகாற்றுப்படைத் தொடரில் (வரி, 226) 'கந்து' என்பது 'ஆதீண்டு குற்றி' (பசு முதலியன உராயும் தறி) அல்லது யானைத்தறி எனும் பொருளை உணர்த்துகின்றது. 'கந்திற் பிணிப்பர் களிற்றை' என வரும் நான்மணிக்கடிகை (பா,12)ப் பகுதியில் 'கந்து' என்பது யானை கட்டுந் தறி' யையே குறிப்பதாகும். 'கந்துமா மணித்திரள் கடைந்து' என்று வரும் சீவகசிந்தாமணிப்பாடற் பகுதியில் (பா,155) 'கந்து' என்பது தூண் என்னும் பொருள் பயப்பது. இவ்வாறு கந்து என்ற சொல் பண்டைத் தமிழ் நூல்களிலேயே பயின்று வழங்குவதாம் தமிழ்ச் சொல்லே எனக் கொள்ளக் கிடப்பதாய் உள்ளது.

'கந்த' என்று பாகதத்திலும், ஸ்கந்த: என்று சமஸ்கிருதத்திலும், கந்தன் என்று தமிழிலும் வழங்கும் சொற்களை ஒப்பிட்டுத் தமிழில் வழங்கும் கந்தன் என்ற சொல் சமஸ் கிருதத்தில் வழங்கும் ஸ்கந்த: என்பதன் திரிபு எனக் கூறுவர். கந்து எனத் தமிழில் வழங்கும் சொல்லும் ஸ்கந்த என்ற சமஸ்கிருதச்சொல்லின் திரிபென்பர். ஸ்கந்த: என்பதிலிருந்து

அமைதியாக வாழ எதையும் விட்டுக்கொடுக்கலாம்.

கந்தன் பிறந்தது என்பதை ஓரளவு ஏற்கலாமாயினும், ஸ்கந்த என்பதிலிருந்து கந்து பிறந்தது என்பதை ஏற்பதற்கில்லை. ஏன்? இவ்வாறு திரிந்துவரும் முறைமை பிறவிடத்துக் காண்டலின்மையானும், பண்டைத் தமிழ் நூல்களிலெல்லாம் கந்து என்பது திரிபெனக்கொள்ளு மாறின்றிப் பயின்று வருதலானும் என்க. மேலும் கந்தனை உணர்த்தும் ஸ்கந்த: என்ற இடத்துவரும் தகர ஒலி வேறு. கந்து என்பதை உணர்த்தும் ஸ்கந்த என்ற இடத்துவரும் தகர ஒலி வேறு. கந்து எனவே முருகனை உணர்த்தும் கந்தன் என்ற சொல் ஸ்கந்த என்ற வடசொல்லின் திரிபெனக் கொள்ளாது கந்து என்ற சொல்லடியாகப் பிறந்த சொல்லெனக் கொள்வதே நேர். ஐந்து முகங்களை உடைய சிவபெருமான் தன் அதோ முகத்தோடும் ஆறுமுகங்கள் கொண்டு ஒவ்வொரு முகத்திலுமுள்ள ஒவ்வொரு நெற்றிக்கண் வாயிலாக ஆறு நெற்றிக் கண்களிலுமிருந்து ஆறு தீப்பொறி களைத் தோற்றுவிக்க, அவற்றிலிருந்து உண்டான ஆறு குழந்தைகளையும் அம்பிகை வாரி அணைத்த காலையில் அவை ஆறுமுகங்களொடும் பன்னிரண்டு கைகளொடும் ஒரு குழந்தையாய் ஒன்றான நிலையை 'ஸ்கந்த' என்ற சொல் குறிப்பதென்று கூறி, அந்நிலையைக் குறிக்கும் தமிழ்ச் சொல் கந்த என்று திரிந்து பின் ஆண்பால் விகுதி ஏற்றுக் கந்தன் என வழங்கும் சொல் என்பர். ஒன்றான நிலையைக் குறிக்கும் ஸ்கந்த (Skandha) என்பது வேறு. கந்தனைக் குறிக்கும் ஸ்கந்த: (Skanda) என்பது வேறு.

தமிழ் நாட்டின் கடவுட் கொள்கை தொன்மையானது. இக்கடவுட் கொள்கை தமிழரிடம் தானாகப் பூத்ததேயன்றிப் பிறரிடமிருந்து வந்ததன்று. இயற்கைப் பொருள்களைப் பிறழ்ச்சியின்றி இயங்கச்செய்யும் பேராற்றலுடைய ஒரு பொருள் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாததாய், இத்தகையது என்று சொல்லமாட்டாததாய் நிற்பதென்ற உண்மையைத் தமிழர் தாமாகப் பண்டே உணர்ந்தனர்; மனம், மொழி மெய்களைக் கடந்து நிற்கும் அதனைக் கடவுள் என்ற சொல்லாற் குறித்தனர். அஃது யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்பதென்பதை இறை என்ற சொல்லாற் குறித்தனர். அதுவே ஒவ்வோர் உயிரினும் உள்நின்று இயக்குவது என்பதை இயவுள் என்ற சொல்லாற் குறித்தனர். எல்லா ஆற்றலும் உடைய அது தாம் நினைந்த வடிவாகத் தம் ஊனக்கண் முன் எழுந்தருளிக் காட்சியளித்துத் தாம் வேண்டும் குறையை முடிக்கவும் வல்லது என அவர்கள் உணர்வுபெற்ற நாளே அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எல்லாச் சிறப்புக்களும் எய்தும் சிறந்த நாளாயிற்று. அந்த நாளும் இஃது என எட்டி அறியாத தொன்மை வாய்ந்தது எனலாம். நமக்கு இன்று கிடைத்திருக் கும் மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலேயே கடவுளைக் கண்ணாற் காணும் முறையிலே கடவுள்

உயர்ந்த நேர்மையிற்றான் அதிகம் பணிவு இருக்கும்.

வழிபாடு நிகழ்ந்து வந்ததற்குச் சான்று பெறுகிறோமாதலின் அவ்வழிபாடு தொன்மையதென்பதற்கு எள்ளளவும் ஐயமே இல்லை.

இத்தகைய வரலாற்று வளர்ச்சி முறையை அறியமாட்டாத தமிழருட் சிலர் அருவமாகவே கொள்வதற்குரியது கடவுள் என்றும் உருவமாக அதனைக் கொள்ளும் முறையும், கோயில் வழிபாடும் கோயில்களும், அவற்றிலுள்ள உருவத்திருமேனிகளும் பிறரிட மிருந்து தமிழ் நாட்டிற் குடிபுகுந்தவை என்றும் கூறிக்குழப்பம் செய்வர்.

எட்டியறியமாட்டாத கடவுளாய், யாண்டும் நிறைந்திலங்கும் இறையாய், எல்லா உயிருள்ளும் இருந்தியக்கும் இயவுளாய் இம்முறையில் அருவாய் நிற்கும் அது, அன்பொன்றற்குக் கட்டுப் பட்டு, வழிபாடு ஆற்ற நினைக்கும் எவ்விடத்திலும் அன்பர்கள் குறித்த ஒரு குறியை (இலிங்கத்தை)ப் பற்றுக்கோடாகக் கொண்டு அவர்கள் தங்கள் கண்களும் கருத்துக்களும் கண்டுணர்ந்து மகிழ்ச்சி எய்தும் வண்ணம் அழகோவியமாக எழுந்தருளிக் காட்சியளித்து அவர்கள் குறையை முடித்துக் களிப்பூட்டிய செய்தியைப் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நாம் பரக்கக் காணலாம்.

உருவ வழிபாட்டின் பழைமை யான அடிப்படையை உணர்த்துவதே 'கந்து' ஆகும். 'கந்து' என்பது பண்டைய இலக்கியங்களிற் பல பொருள்களை உணர்த்தியதற்குச் சான்று முன்னரே காட்டினோம். ஒரு சொல்லுக்கு ஒரு பொருளே இயற்கையானது. மற்றைப் பொருள் களெல்லாம் அதனை அடிப்படை யாகவும் சார்பாகவும் கொண்டு பிறக்கும் சார்புப் பொருள்களே ஆகும். மேற்காட்டிய சான்றுகளில் வரும் பொருள்களையெல்லாம் சீர்தூக்கி ஆராய்வோமானால் கந்து என்பதன் இயற்பெயர்ப் பொருள் 'தறி' (மரத்துண்டு, மரத்தூண், மரக்கோடு) என்பதேயாகும் என்று துணியலாம். இன்று சிவாலயங்களிற் காணப்படும் இலிங்கங்கள், பண்டு மரத்தறியாயிருந் தவை பின்பு கற்றறியாய் மாறுபாடுற்றவைகளே. மரத்தறிகள் விரைவில் அழிந்துபோகும் தன்மை யுடையன. கற்றறிகள் அவ்வாறு அழிந்துபோகும் தன்மையுடையன அல்ல. எனவே மரத்தறி நட்டு அதிற் கடவுளை வழிபட்ட முறைமை தமிழ் நாட்டின் மிக்க பழைமையைக் காட்டுவதாகும்.

சிவபெருமானுடைய வீரியம் நழுவியதால் தோன்றினவன் ஸ்கந்தன் (Skandha). ஆறு வேறு குழந்தை களாக முன் இருந்து பின்பு ஒன்று சேர்க்கப் பெற்றவன் ஸ்கந்தன் (Skandha). முன்னைய வரலாற்றைப் பரிபாடலிற் காணலாம். பின்னைய வரலாற்றைத் தமிழ்க் கந்தபுராணத்திற் காணலாம். இப்படி வேறுபட்ட ஒலிகளையுடைய வடமொழிச் சொற்களால் வேறுபட்ட வரலாறுகள் ஒன்றாகிக் கந்தன் வரலாறாக வழங்குவதில் உள்ளத்தைப்

⁂ எது கிடைத்தாலும் திருப்தியில்லாதவர்களுக்குத் தேவை அதிகம். ⁂

பறிகொடுப்பதைவிடக் கந்து என்னும் தறி அல்லது தூண் நட்டு வழிபாடாற் றுங்கால், அதனைப்பற்றுக் கோடாகக் கொண்டு அன்பர்க்குக் காட்சியளித்த வனே கந்தன் என்று கொள்வது சாலச் சிறந்ததும் பயனுடையதும் ஆகும்.

பண்டைத் தமிழர் வழிபாட்டில் சடங்கும் மந்திரங்களும் வற்புறுத்தப் பெறவில்லை. எளியார்க்கு எளியனா கவே முருகன் கருதப்பெற்றான். அன்பொன்றே அவனை வழிபடுவதற்கு உரிய சடங்கும் மந்திரங்களும் ஆகும். அவனை வழிபடுவதற்கு இன்ன இடந் தான் தக்கதென்ற வரையறை இல்லை. எல்லாம் அவன் உறைவிடங்களே. யாண்டும் நிறைந்திலங்கும் அவன் உறையாத இடமே இல்லையன்றோ! எளியார்க்கு எளியனாகும் முருக னுடைய அருளியல்பைப் பெறுவதற்கு அரியதொன்றாக்கி உலகப் பொருள் களில் (புலன்களில்) வைக்கும் பற்றை நீக்கி அவனிடத்தில் உறுதியாகப் பற்று வைப்பார்க்கே முருகன் வந்து அருள் செய்வான் எனக் கூறுவன பத்துப் பாட்டின் முதற்பாட்டான திருமுரு காற்றுப்படையில் வரும் திருப்பரங் குன்றப்பகுதி, திருச்சீரலைவாய்ப் பகுதி, திருஆவினன் குடிப்பகுதி, திருஏரகப் பகுதி ஆகிய நான்கும். அவற்றை அடுத்துவரும் குன்றுதோறாடற் பகுதி அவனுடைய எளியார்க்கு எளியனாம் தன்மையைப் பொதுவாக உணர்த்துவ தாகும் பழமுதிர் சோலைப்பகுதி அவனுடைய எளியார்க்கு எளியனாம் தன்மையைப் பலபடப் பாராட்டி அச்சத்தை அறவே நீக்கி அவனை வழிபடுவது மிக மிக எளிது; அன்பொன்றே வேண்டற்பாலது; எவ்விடத்து வேண்டுமானாலும் அவன் வந்து அருள் செய்வான் என்பதை விரித்துரைப்பது. இந்த எளியார்க்கு எளியனாம் தன்மையே தமிழராற் போற்றப்பெற்றது; பாராட்டப்பெற்றது; கடைப்பிடிக்கப்பெற்றது. (தொடரும்...

## சும்மா (தியானம்) இருப்பதே சுகம் (ஞானம்)



நமது மனத்தைச் சதாகாலமும் பயனற்ற பல சிந்தனை களினால் அலைபாய விடுவதனால் எந்தப் பலனும் கிடையாது. போலியான மனத்துடன் ஆன்ம சுகம் இன்று வரும் நாளை வரும் என்று இறுமாந்து என்றுமே கிடைக்காத நிலையில் ஏமாற்றமுற்று மனத் தூய்மையற்று வீணாகக் காலத்தை கழிப்பதனால் என்ன பயன்? நீக்கமற அண்டவெளியான ஆகாயத்தைப் போல் தன் மனத்தினை ஒருநிலைப்படுத்தி மனம் சமநிலையை எய்தியபோது ஆன்ம சுகம் அடைவது திண்ணம். சும்மா (தியானம்) இருப்பது என்பது மட்டும் பெரிது அல்ல. அந்த நிலையை (சும்மா) மனத்தை எதன்பொருட்டும் அலைபாயவிடாமல் வைராக்கிய சிந்தையுடன் இருக்கப் பழகிவிட்டால் ஆண்டவனின் அருளால் உலக நிகழ்வுகளைச் (சும்மா) தியானத்தில் இருந்து கொண்டே மனக்கண்ணாற் காணலாம்.

பரம்பொருளான இறைவனுடன் சிந்தையை ஐக்கியப்படுத்திப் பேரின்புறலாம் ஊழ்வினைப் பயனால் ஏற்பட்ட கடந்தகாலப் பிறப்பை அறியலாம். இனிவரும் பிறப்பையும் உணரலாம்.

உ

# மனுநீதிச் சோழன்

துன்னையூர் சி. செல்லமுத்து அவர்கள்

வடநாடு சென்ற அகத்திய மாமுனிவர் அங்கிருந்த கங்கா தீர்த்தத்தைக் கமண்டலத்தில் மொண்டு வந்தார். தென்னாடு திரும்பிவந்த அவர்; அதனை ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தியானத்திலிருந்தார். அவ்வேளை விநாயகப் பெருமான் அதன்மேல் காக்கையுருவுடன் வந்தமர்ந்து காலால் அதனைச் சரித்தார். அதிலிருந்த நீர் பெருகிக் காவிரி ஆறாகப் பெருகிப் பாய்ந்தது. அது மருவி இன்று "காவேரி நதி" எனப்படுகிறது. அதன் வளத்தால் "சோணாடு சோறுடைத்து" என்னும் பெருமையேற்பட்டிருக்கிறது.

அந்நாட்டைச் சோழமன்னர்கள் நீதி நெறி நின்று நெடுங்காலம் அரசோச்சினர். அவர்களுள், மனுநீதிச் சோழமன்னர் உலகப் புகழ்பெற்று என்றென்றும் மக்கள் உள்ளத்தில் நிலைத்திருக்கின்றார். காவிரிக்குப் "பொன்னி நதி" என்னும் மறுபெயரும் உண்டு. நிலவளம், நீர்வளம், காவளம், நன்செய் புன்செய் வளம், மற்றெல்லா வளமும் பெருகிப்; பொன்னும் மணியும் கொழித்த அந்த நாட்டைச் சோழ மன்னர்கள் பரம்பரையில் வந்த மனுநீதி வேந்தன் தன்னுயிர் போல் நேசித்தார். மக்களுக்கான எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றினார். முறையிடுவோர் வசதிக்காக; "ஆராய்ச்சி" மணியொன்றும் தொங்கவிட்டார். நெடுங்காலமாக எந்தவகையான முறைப்பாடுகளும் வரவில்லை.

"மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண வியற்றினார்"

மனுவேந்தனுக்குச் சிங்கக் குருளை போன்ற ஏகபுத்திரன் உதித்தார். உரியபருவங்களில் அரசர்க்குரிய எல்லா வித்தைகளும் கற்றுத் தேறினார். நாற்படைப் பயிற்சிபெற்றுச் சிறந்து விளங்கினார். மக்கள் யாவரின் உள்ளங்களிலும் நிலை பெற்றார். அவ்வாறிருக்குங் காலத்தில்; ஒரு நாள் தேரேறி வீதிவலம் வந்தார். அவ்வேளை புனிற்றிளங்கன்றொன்று துள்ளிப் பாய்ந்து தேர்ச்சில்லில் அகப்பட்டு, நெரியுண்டிறந்தது. அது கண்டதாய்ப்பசு அங்குமிங்கும் அலமந்து ஓடிற்று. அலறிச் சோர்ந்தது நடுங்கி நிலத்தில் வீழ்ந்தது. அதுகண்ட அரசிளங்குமரன் பதைபதைத்து மயங்கினான். மனு வேந்தனுக்குத் தீராப்பழி தன்னால் ஏற்பட்டதேயெனப் பெருமூச்சு விட்டான். அதனால் பழியை மாற்றும் வகை பற்றிச் சிந்தித்தான், மறையவரிடம் சென்றான். பசுவும் மன்னன் அரண்

**அறிவு ஒருவனைச் சிந்திக்கவைக்கும், ஆனால் பணம் ஒருவனை ஆட்டிவைக்கும்**

மனைவாயில் சென்று ஆராய்ச்சி மணியின் கயிற்றை வாயாற் கௌவி இழுத்தசைத்தது. அந்த ஓசை தன் மைந்தனைக் கொல்லவரும் மறலியின் எருமை வாகனத்தின் கழுத்தில் தூங்கும் மணியோசைபோல் மன்னன் செவிவழிச்சென்று உள்ளத்தை உறுத்தியது. அதுகேட்ட மன்னன் அரியணைவிட்டு, வாயிற் பக்கம் சென்றான். நீதி தேர்ந்த அமைச்சர் ஒருவர் நிகழ்ந்தது கூறினார். அது கேட்ட மன்னன் பசுவின் துயரைக் காட்டிலும் மேலான துன்பமெய்தினான். பெருவிடந் தலைக்கேறியது போன்று; அரசன் பதைபதைத்தேங்கி வருந்தினான். தாய்ப்பசுவிலும் மேலான துன்பம் அடைந்தான். அதுகண்ட மந்திரிமார் அரசனடி வணங்கி; அதற்காக உள்ளம் ஒடியவேண்டாம். பசுவதை செய்தார்க்கு மறையவர் விதித்தபடி பிராயச்சித்தம் செய்வதே உற்ற கருமம் என்றனர். அரசன் அதுகேட்டு உள்ளம் வாடி உங்கள் சொற்கேட்டு நான் நடந்தால், உயிரிழந்த கன்று உயிர்க்குமோ? தரும தேவதை சலிப்படையாதோ? என்றான்.

மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ!

என மொழிந்து, ஆவுறு துயரம் தானும் எய்துவதே கருமம் எனக்கூறித் தன் மைந்தனை அழைத்து, மந்திரி முன் நிறுத்தி வீதியிற் கொண்டுபோய்த் தேர்ச்சில்லால் நெரித்துக் கொல்லும் படி கூறினான். அதுகண்ட மந்திரி தன் உயிர் மாண்டுபோனான். மன்னன் தானே தன்மகனைத் தேர்ச்சில்லால் நெரித்துக் கொன்றான்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைசொரிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

சடாமுடியிலே கங்கையும், பிறையும் சூடியவராய் உமைசமேதரராய், பூதகணம் பலவும் சூழ்ந்து வர; எழுந்தருளிய எம்பெருமானருளால் கன்றும், அரசிளங்குமரனும், மாண்டு போன மந்திரியும் நித்திரை விட்டு எழுந்தது போன்று, உயிர்த்தெழுந்தனர். அரசனுக்கும் இறைவன் அருள் பாலித்தார். ஏழுலகும் மன்னனை ஏத்தித் துதித்தன.

“என்றென்றும் மனுநீதி நின்று நிலை பெறவே
குன்றன்ன பாபமுங் குன்றி யகன்றிடவே
மன்றுள் நடமாடும் மதிசூடி யருளாலே
இன்றுளார் என்றென்றும் இனிதாக வாழ்வீரே.”

திருச்சிற்றம்பலம்.

*** தன்னை மதிப்பீட்டுக் கொள்ளாமல் பிறரை மதிப்பீடாதீர்கள். ***

உ

# "உலகை ஒன்றாகக் காண்பதே காட்சி"

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சைவநெறி, 'உலகம் ஒன்று என்கின்ற ஒருமை உணர்வினை மனிதர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் மகுட வாசகத்தை நம் முன்னோர் இந்த அடிப்படையிலேயே தான் உலகிற்கு வழங்கியுள்ளார்கள். உலகத்திலுள்ள ஊர்கள் எல்லாம் நமது சொந்த ஊர்கள் தாம்; உலகில் வாழ்கின்ற எல்லோரும் நமது சொந்தக்காரர்களே, என்பது இவ்வாசகத்தின் பொருள்.

சைவம் சிவசம்பந்தமுடையது; சிவம் அன்பு சம்பந்தப்பட்டது. அன்பே சிவம்; சிவமே அன்பு. பொதுவாக அன்பு மிக நெருங்கிய உறவினருடன் தான் ஏற்படுகின்றது. எனவே தான், உலகில் உள்ள அனைவரையும் எமது உறவினராக வரித்துக் கொண்டால், எல்லோர் மீதும் வேறுபாடின்றி அன்பு செலுத்த முடியும் என்னும் வகையில் இந்த மகுடவாசகம் உருவாகியுள்ளது. உலகம் ஒன்று என்ற ஒருமையுணர்வினாலேயே எல்லோரையும் உறவினராகவோ, சொந்தக்காரர்களாகவோ மதிக்கும் உணர்வு தோன்றமுடியும். சைவம் இதை நன்கு அறிந்திருக்கிறது. முரண்பாடுகள், குழப்பங்கள், அமைதியின்மை இல்லாத உலகைக் காண்பதற்குச் சைவம் கூறும் வழி இதுவாகும்.

சமயம், மனிதனது வாழ்க்கை முறையையும் ஒழுக்கத்தையும் ஒழுங்குபடுத்தி, மனிதப்பிறவி யெடுத்ததன் நோக்கத்தை நோக்கி முன்னேற அவனுக்கு வழிசமைப்பதாக அமையவேண்டும். சைவம் காட்டும் வழி அன்பு வழியாகும். அன்பு என்பது பிறருக்குத் தீமை எதையும் செய்யாமல், எல்லோருக்கும் நன்மையையே தரும் சிறந்த விழுமியம் எனலாம்.

அன்பிற்கு இரண்டு முக்கிய வெளிப்பாடுகளாகத் தொண்டையும், கடமையையும் கூறலாம். தொண்டு என்பது தன்னலமற்ற சேவையாகும். தன்னலமற்ற உள்ளத்திலேதான் அன்பு அரும்பி மலர்கிறது. குடும்பத்திலும்சரி, சமூகத்திலும்சரி, தொழிலிலும்சரி ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு. கடமைகள் சரிவர நிகழ்த்தப்படுவதற்கு அன்புதான் காரணம். குடும்பத்தில் கடமைகளைச் சீராகச் செய்வதற்குக் குடும்பத்தின் மீதான அன்புதான் காரணம். அவ்வாறே சமூகத்திலும், செய்யுந் தொழிலிலும் அன்பிருத்தல் காரணமாகவே அவ்வவற்றுடன் சம்பந்தப்பட்ட கடமைகள் சீராகச் செய்யப் படுகின்றன.

சிலர், கடமைகளைப்புறக் கணிப்பதற்கும் உரிமைகள் பற்றியே பெரிதும் பிரஸ்தாபிப்பதற்கும் முக்கிய காரணம் அவர்களிடம் அன்பு வற்றி விட்டமையும், தன்னலம் மேலோங்கி

** கடவுளுக்குப் பயந்து நடப்பவனிடம் மற்றவர்கள் பயப்படுவார்கள். **

நிற்றலுமேயாகும். உரிமைக்குரல் உரக்கக் கேட்கும் குடும்பங்களில் அன்பு பறிபோய் விடுவதைக் காண் கின்றோம். அன்பு பறிபோய் விட்டால் சிவம் வெளியேறிவிடுகிறது. சிவம் வெளியேறிவிட்டால், கருணை, இரக்கம், மனிதநேயம் முதலிய தெய்வீகப் பண்புகள் குடும்பத்தில் மறைந்து விடுகின்றன. தெய்வீகம் மறைந்து விட்ட குடும்பங்கள் சீரழிய நேரிடுகின்றன. அந்த நிலையில் குடும்பச் சீரழிவு, சமூகச் சீரழிவு என்பன தடுக்கமுடியாதனவாய்ப் போய் விடுகின்றன.

குடும்பங்கள் சீராக விளங்கு வதற்குத் தெய்வீகம் நிலைபெற வேண்டும். தெய்வீகம் குடும்பத்தில் பொலிவதற்கு அங்கு சிவம் உறைய வேண்டும். அன்பே சிவம் ஆகும். சிவம் உறைதல் என்பது அன்பு உறைதல் எனலாம். அன்பின் வெளிப்பாடாக, இன்னும் கூறுவதானால் சிவத்தின் வெளிப்பாடாக, தன்னலமற்ற தொண்டு, கடமைகள், கருணை, இரக்கம், கரி சனை என்பன குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரிலுமிருந்து பிரவாகித்துக் குடும்பத்தை நிறைக்க வேண்டும்; அன்பினால் நனைக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் சிவ குடும்பம் ஆகப் பரிணமிக்க வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை யைத்தான் அப்பொழுது காணமுடியும். துன்பத்தின் சுவட்டையே காணமுடி யாமற் போய்விடும்.

நாம் பிறர்மீதும், உயிர்கள் மீதும் கொள்ளும் அன்பு, கருணை, இரக்கம், கரிசனை என்பன தாம் மிகச் சிறந்த சிவவழிபாடு ஆகும். தன்னல மற்ற தொண்டுகள் சிவத்திற்குச் செய்யும் அர்ச்சனையும், அபிடேகமும், ஆராதனையும் ஆகும்.

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

நெய் முதலிய ஆகுதிப் பொருள்களை ஏராளமாக யாககுண் டத்தில் இட்டு அக்கினி வளர்த்து ஆயிரத்திற்கும் அதிகமான வேள்வி களை இறைவனை நோக்கிச் செய் தலைவிட, ஒன்றன் உயிரைக் கொன்று அதன் உடலை உணவாகத் தின்னா திருத்தல் மிக மிக மேலானதாகும். கருணாமூர்த்தியாகிய சிவத்திற்கும் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணா மையே விருப்பமும் உடன் பாடும் ஆகும். சைவசமயத்தவர் சிவத்தை ஆராதிப்பவர்; அதன்வழி அன்பினை உபாசிப்பவர். அன்பினை உபாசிப்பவர் கொலையையும் புலாலுண்ணலையும் தவிர்ப்பது சைவ நீதியாகும்.

---

தனந்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம் (உலக நீதி)

---

** அன்பும், மரியாதையும் உள்ளவன் எதையும் சாதிப்பான். **

(தொடர்ச்சி..

உ



# அருணகிரிநாத சுவாமிகள் அருளிய கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்

## இதற்கு இது துணை

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே.

கண்களுக்குத் துணையாக இருப்பது முருகனின் மேன்மையானதும், மென்மையானதும் தாமரை மலர் போன்றனவுமாகிய திருவடிகளே. உண்மையில் ஒரு சிறிதும் குறையாத சொல்லுக்குத் துணையாயிருப்பன முருகா முதலிய அவனுடைய பல திருநாமங்களே. முற்பிறப்பிற் செய்த சஞ்சிதவினை நீங்குதற்கு துணையாயிருப்பன அவனுடைய பன்னிரண்டு புயங்களே. நாம் பயப்படத் தக்கதான தனியான கடைவழிக்குத் துணையாய் இருப்பன, திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் வேலும் மயிலுமாகும்.

(பழி இம்மையில் நிற்பது. பாவம் மறுமையில் வருவது.)

## சும்மா இரு சுகம் வரும்

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

யோகிகளே! தோலாற் செய்த காற்றுத் துருத்தியைப்போலப் பிராண வாயுவைக் குடல் நிறைய நிரப்பி முறியச்செய்து வாயுவையே உணவாக உண்ணச்செய்து உடலை வருத்துவதனால் பயன் ஒன்றும் இல்லை. இவ்வாறு உடலை வருத்தினாலும் ஞானம் உண்டாகாது. இது இன்றேல் பரகதி கிடையாது. “சிவயோகம்” என்பதைத் தெரிந்து, ஆறுமுகக் குருநாதராகிய முருகன் “சும்மா இரு சொல்லற” என்று உபதேசித்தபடி மனத்தை ஒருநிலையாக்கினால் வீட்டின்பம் எளிதிற் கிடைக்கும்.

(சும்மா இருந்து சுகம் பெறுங்கள். யோகம் - கூடுவது, சிவத்தோடு கூடுவது சிவயோகம்).

அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம்.

## சாகும் போதாவது நினை

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

சிவந்த திருமேனியை உடையவரை, பகைவர்களைத் தன் ஆற்றலால் வற்றச் செய்பவனை, திருச்செங்கோடு என்னும் மலையில் எழுந்தருளி இருப்பவனை; சிவந்த ஒளிகாலும் வேலுக்குத் தலைவனை, செந்தமிழில் இலக்கிய, இலக்கண நூல்களைப் பரவச் செய்தவனை, தவமே வடிவாக விளங்கும் வள்ளி நாயகியாரின் காதலனை, வாசனை மிகுந்த கடப்ப மலர் மாலையை அணிந்தவனை, மேகத்தைக் கண்டு மகிழும் மயில்வாகனத்தை உடையவரை, மரண காலத்திலாயினும் மறவாது நினைப்பவருக்கு எந்தவிதமான குறைபாடும் உண்டாகாது.

## முருகன் அருளானந்தம் சொல்லொணாதது

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கும் மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே.

ஆறுமுகங்களையுடையவரே! போதலும் வருதலும், இராக்காலமும் பகற்காலமும், வெளியும் உள்ளிடமும், உருவமும் இறுதியும், ஒன்றும் இல்லாததுமாகிய ஒருபொருள் அடியேனிடம் வந்து வந்து மோதிப்பொருதும் அதுவாகவே எனக்கு மன அடக்கத்தைக் கொடுக்கின்றது. அடியேனைத் தன்னுள்ளே ஐக்கியம் ஆக்கிக் கொள்ளுகின்றது. இந்த ஆனந்தத்தை இத்தன்மையது என்று சொல்லமுடியாது. (தொடரும்..




1) உனது செல்வம் அழியாமல் இருக்க வேண்டுமானால் நீ மூன்று காரியங்களைச் செய்யாமலிருக்க வேண்டும்.

அ) ஏழைகள் கண்களிலிருந்து நீர் வரவொட்டாமல் இருக்க வேண்டும்.

ஆ) பிறருடைய பொருள் உனக்கு வரவேண்டுமென்று கனவிலும் கருதாதே.

இ) நியாயம் அல்லாத வழியிற் பொருளைச் சேர்க்காதே.

** அன்பைப் பாராட்டுவது உள்ளத்தின் இயல்பு. **

உ

# இறைதொண்டும் இறைதியானமுமே பேரின்பப் பெருவாழ்வுக்கு வழிவகுக்கும்

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

"அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். ஆகவே புனிதப் பிறவியாகிய இந்த மனிதப் பிறவி எடுத்த நாங்கள் பூர்வ ஜென்மத்திற் புண்ணியஞ் செய்தவர்கள் ஆவோம். அரிதினும் அரிதான இந்தப் பிறவி எடுத்ததன் பயனை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆறாம் அறிவாகிய பகுத்தறிவைக் கொண்டு உலகியலை அறிந்து அதற் கேற்றாற் போல் நம்மை நெறிப் படுத்திக் கொள்ளவேண்டும். அதுவே நேர் வழியாகும். எல்லாவிதமான மனிதர் களும் பல்வேறு வகையில் இந்த உல கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரவர் தன்மைக்கேற்ப உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் செய்துகொண்ட வினைகளுக் கேற்றவாறு இன்ப,துன்பங்களை அனு பவிக்கின்றார்கள். வாழ்க்கையின் நிலை யும் அவரவர் தரத்துக்கேற்ப மாறுபடு கின்றது; வேறுபடுகின்றது.

"புண்ணியமாம் பாவம் போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்."

என்பதற்கிணங்க நாம் செய்த பாவபுண்ணியமே எம் வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கின்றன. நன்மைகள் பல செய்தவர் இன்பங்கள் பலவற் றையும் தீமைகள் பல செய்தவர் துன்பங்கள் பலவற்றையும் அனுபவிக் கின்றனர். இது நியதி.

மேலும், இது தொன்றுதொட்டு நிலவி வருகின்ற ஒரு பெருவழக்காகும். முற்பகல் செய்யின் பிறபகல் விளையும் என்று நினைத்து வாழ்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஊழ் வினைப் பயன்படியே எதுவும் நடக்கும் என்பதை மனத்தில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, 'அரசன் அன் றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும்' என்ற முதுமொழிக் கிணங்க, சுவரிலே வீசப்பட்ட பந்தானது மீண்டும் எம்மிடமே வருவது போல நாம் செய்த பாவ புண்ணியங்கள் எத்தகையனவோ அவற்றின் படியே எமது வாழ்வும் அமையும்; திரும்ப எம்மிடமே வரும். இதுவும் உலக நியதி.

வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். ஆகவே, நாங்கள் ஆன்மஈடேற்றம் அடைய வேண்டு

அன்பு என்பது போர் போன்றது, துவக்குவது சுலபம்.

மாயின் ஆலயவழிபாடும் இறை தொண்டும் செய்யவேண்டும்.

இறைதொண்டின் மூலமே இறைவனின் பேரருட் கருணைக்குப் பாத்திரராக முடியும். ஆலய வழிபாட்டின் மூலமே ஆன்ம ஈடேற்றத்தைப் பெறமுடியும். ஒவ்வோர் உயிரும் இறைவனாற் படைக்கப்பெற்றவை. இந்த உலகில் வாழ்கின்ற ஜீவராசிகள் அனைத்துமே ஆண்டவனின் அருளினால் ஆக்கப்பட்டவை. அவனுடைய அதாவது ஆண்டவனுடைய அருட் பெருங்கருணையில்லாமல் நாம் இப் பூவுலகில் வாழவே முடியாது.

வாழ்க்கை முழுவதுமே வளமாய் அமைந்திட அந்த எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளாகிய பரங்கருணைத் தடங்கடலாக விளங்குகின்ற பரமேஸ்வரனை வழுத்துதல் வேண்டும். அந்தப் பெருமானின் ஆராவமுதான அருட்பிரவாகத்தில் மூழ்குதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அந்த ஆடவல்லானின் அருட்பிரவாகம் கரை புரண்டோடுவதற்கு ஆதிபராசக்தியாகிய அம்பிகையின் அருட்சக்தியே ஒளியூட்டியாக நிற்கின்றது. அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை உமையம்மை தன்னுடைய அருட்சக்தியினால் சிவனுடைய ஆளுமைக்குட்பட்டு அண்ட சராசரங்களையும் ஆட்டிப்படைக்கின்றாள். அவளுடைய அருட்பெருங்கருணையினாற்றான் நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆகவே, அருளின் ஆளுமைக் குட்பட்டிருக்கும் போதே நம்மை நன்னெறியிற் செலுத்திக் கொள்ள வேண்டும். நாம் அறநெறிப்படி வாழ்ந்தாற்றான் தூயவாழ்வு கிடைக்கும். தூய சீரான நல்வாழ்வுக்கு இறை தொண்டும் ஆன்மீக நோக்குமே வழி வகுக்கும்.

இறைவனுக்குத் தொண்டு செய்வதன் மூலமும் இறைதியானத்தின் மூலமும் நம்மை நாமே நன்னெறிப் படுத்தி மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிறவிப் பிணிதீர்க்கும் அருமருந்தாக விளங்குகின்ற திருநீற்றை அணிந்து, நாம் முற்பிறப்பிற் செய்த பாவங்களையெல்லாம் நீறாக்கி மாக்களாக வாழாமல் மக்களாக வாழ்ந்து இறைவனின் அருட்பிரவாகத்துள் அழுந்திப் பேரின்பப் பெருவாழ்வெய்துவோமாக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

பொருளைச் சேகரிப்பதாலும், பெண்ணை மணந்து கொள்வதனாலும், மக்களைப் பெறுவதனாலும் நீ துன்பத்தை நீக்கிக்கொண்டு இன்பத்தை அடைய முடியாது. நெய்யினால் நெருப்பை அணைக்க முடியாது. துன்பமாகிய நெருப்புக்கு மனைவி மக்கள் பொருள் முதலியன நெய் போன்றவை.




பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் எல்லைகள்.

உ

# அம்மே! அப்பா! என்றழைத்து அழுத பிள்ளையார்

திரு அ. சுப்பிரமணியம் அவர்கள்

அழுகை பலவகை. கவலை மிகுதியால் அழுவது ஒன்று. தேவைக்காக அழுவது இன்னொன்று. இந்த வகையுள் அடங்காத அழுகையை ஆளுடைய பிள்ளையார் அழுதார். இந்த அழுகை உலகம் வாழ்வுற வைத்தது. சைவசமயமே சமயம் என நிறுவியது.

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திரு ஞான சம்பந்தர்
பாத மலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்."

என்கின்றது திருத்தொண்டர் புராணம். தமிழ் மண்ணிலே பிறந்து வாழ்ந்து பக்தி நெறிதழைக்கச் செய்த பிள்ளையார் புனிதவாய் மலர்ந்து அம்மே! அப்பா!! என அழுது ஞான அமிர்தம் உண்டவர்.

நாயன்மார்களைப் பாடிய பெருங் காப்பியம் பெரியபுராணம். இது தேசியக் காப்பியமாகப் போற்றப் படுகிறது. இதன் ஆசிரியர் சேக்கிழார். தில்லைக் கூத்தன் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்க அவரது அருட்டிறத்தைக் காப்பியம் முழுவதும் மணக்க வைத்தவர் நூலை முடிக்கும் போதும் "உலகெலாம்" என முடித்துள்ளார். சைவ சமயத்தின் தெய்வப் பாடல்கள் பன்னிரு திரு முறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரியபுராணம் பன்னிரண்டா வது திருமுறையாகும். சைவத்தின் தர்ம நெறியாவன கந்தபுராணமும் திருவிளையாடற் புராணமும் பெரிய புராணமும் ஆகும். பெரிய புராணத்தில் ஏறக்குறைய அரைவாசிக்கு மேற்பட்ட பாடல்கள் பாலறாவாயரின் புராணமாகும். அவர் தலங்கள் தோறும் பாடியருளிய தேவாரப் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளுமாகும். இது பூவும், நீரும், சீலமும் கொண்டு சிவனைப் பேணும் சைவநெறியாளருக் குக்கிடைத்த சிவஞானப்புதையலாகும்.

சிவபாதவிருதயர் நித்திய கடமைக்காகப் புறப்படுகிறார். தானும் வருவேன் என்று அடம்பிடிக்கிறார் பிள்ளையார். தந்தை தடுத்தபோதும் பிடிவாதமாகப் பின் தொடரும் பிள்ளையின் செயல் எம்பெருமான் அருளாவது போலும். பிள்ளையாரைக் குளக்கரையில் இருத்திய தந்தையார் தோணியப்பரையும் அம்மையாரையும் காவலராக்கியமையும் உய்த்துணரற் பாலது. மூன்று வயதுக் குழந்தை விபரம் அறியாதது. தன்னைத் தொடர்ந்து குளத்துள் இறங்கினால் ஆகும் அவலம் பயங்காட்டுகிறது. நியமமும் தவற விடமுடியாது தவித்

தவர் கடவுளைக் காவல் வைத்து நீரில் மூழ்குகின்றார். மூழ்கிய நீர்நிலை "கழுமல வளநகர்ப் பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்த" இடமாகும். 'கழுமலம்' மலம் கழுவும் இடமாயது உடம்பின் புறத்தூய்மை நீரால் அமையும். அகவிருளாய மலம் கழுவும் இறையருள் கூடிய நகரமாதலால் 'கழுமல வளநகர்' எனப்பட்டது. பாவ விமோசனத்திற்காக உடம்பு முழுவதையும் நீரில் அமிழ்த்தி வேதவழி வழுவாது சிவபாத விருதயர் மூழ்கினார். அவ்வேளை தந்தையைக் காணாத பிள்ளையார் அம்மே! அப்பா!! என்று அழத்தொடங்கினார். இவரது அழுகையைக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்; காண்போம்.

கண் மலர்கள் நீர்ததும்பக் கை மலர்களாற் பிசைந்து
வண்ண மலர்ச் செங்கனி வாய் மணி அதரம் புடை துடிப்ப
எண்ணில்மறை ஒலி பெருக எவ்வுயிரும் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர் தாம் பொருமி அழுதருளினார்."

பெரியபுராணம் வம்பறாவரிவண்டுச் சருக்கம் பாடல்1960

அந்நிலையில் திருத் தோணி வீற்றிருந்தார் அருள் நோக்கால்
முன்னிலைமைத் திருத் தொண்டு முன்னியவர்க் கருள் புரிவான்
பொன்மலை வல்லியுந் தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச்
சென்னி இளம் பிறை திகழச் செழும் பொய்கை மருங்கணைந்தார்.

பெரியபுராணம் 2ஆம் காண்டம் வரிவண்டுச்சருக்கம் பாடல் 1962

அழுகின்ற பிள்ளை மீது அருட் கருணை பூண்ட சிவன் மலை மகளை நோக்கிப் பாலூட்டப் பணிக்கிறார். நாயகன் அருள்கூர உலகநாயகியாம் உமையம்மை அபரஞானம், பரஞானம் என்னும் திருவுடைய தமது திருமுலை களிலிருந்து பாலைப் பொன் வள்ளத் திற் கறந்தெடுத்து

"எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
"உண்ணடிசில்" என ஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர் நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணம் அளித்(து)
அண்ணலை அங் கழுகைதீர்த் தங்கண்ணார் அருள் புரிந்தார்.

பெ. பு. திருஞானசம்பந்தர் வரலாறு 2ஆம் காண்டம் 6ஆம் சருக்கம் பாடல்1966.

அழுகை தீர்ந்த பிள்ளை பால்வடியும் வாயுடன் இருப்பதை நீராடிக் கரையேறிய தந்தை பார்க்கிறார். அபசாரம் நேர்ந்து விட்டதாக ஆத்திரம் கொண்டு அடிக்க வருகிறார். "யார்? தந்த பால் உண்டாய்? சொல்; என மிரட்டுகிறார். மூன்று வயதுக் குழந்தை; முதிர் ஞானம் பெற்ற முதியவராகக் கலைஞானம் கற்றறிந்த பண்டிதராக அங்க அடையாளம்

காட்டிப் பாடுகின்றார். முதலாம் திரு முறையிலே முதலாவது பாசுரமாக வுள்ள "தோடுடைய செவியன்.." எனத் தொடங்கும் திருப்பதிகம்.

ஈன்று புறந்தந்து பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாய்மீது பாசம் கொள்வதும் அவரது அங்கங்களை அவதானிப்பதும் பாவனை செய்தலும் மனித இயல்பு. இதற்கு மாறாக ஆளுடைய பிள்ளையார் நடந்து கொள்வதை அவதானிக்க முடிகிறது. உலக நாயகியாகிய உமாதேவியார் கண்ணீர் துடைத்துப் பொற்கிண்ணத் துப் பாலமுதை உண்ணக் கொடுக்கி றார். அவரது உருவம் காழிவேந்தர் கண்ணிற் படவில்லை. பாசுரம் முழுமையும் "பிரமாபுரம் மேவிய பெம்மான்" கதையே பேசப்படுகிறது. "ஓம்" என்பது பிரணவம். ஓங்கார வடிவினர் விநாயகர். உடம்பின் குய்யத் துக்கும் குதத்துக்கும் இடையில் இருப்பது மூலாதாரம். கடப்பமலரின் தோற்றமுடையது. அம்மலருக் கிடையில் ஓங்கார அட்சரம் விளங்கும் அதில் கணபதியும் வல்லபையும் வீற்றிருப்பர். இவ்வாறு சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனும் ஆதாரங்கள் நகராதி பஞ்சாக்கரமாக உந்தி, நாபி, இதயம், கண்டம், புருவமத்தியாகிய தானங் களில் திகழ்வன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியவர்களுடன் சரஸ்வதி, இலக்குமி, உமாதேவி, மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரும் வீற்றிருப்பர். இஃது இறைவனது மூவகைத் திருமேனிகளின் தாற்பாரியமாகும்.

"தோடுடைய செவியன்" என்னுமிடத்துச், செவி கேட்பது. அதன் வடிவம் 'ஓ'; அதன்கண் பொருந்தி யுள்ள தோடு 'ம்'; எனவே தோடுடைய செவி ஓங்காரமாகிய மூலாதாரமாம். அம்மை அப்பனது மூர்த்தமாகிய நற்குஞ்சரக்கன்று; பிரணவரூபம் சிவ சக்தியாம். சிவம், சக்தி, நாதம், விந்து எனும் நான்கும் அருவத்திருமேனிகள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன் உருவத்திருமேனிகள் சதாசிவம் அருவுருவத்திருமேனியாவார். பரசமய கோளரியின் அழுகை ஒலி கேட்டதும் அருவமாயுள்ள இறைவன் உருவத்திருமேனி தாங்கித் தோடுடைய செவியனாகி ஆனேற்றின் மீதேறிப் புரிகுழல் உமையோடு வருகின்றார். பால்தந்த பார்வதியைப் பாலறாவாயர் காணவில்லை; தந்தைக்கு காட்டமுடியவில்லை. புவியெங்கும் மின்சாரம் பரந்திருப்பது கண்ணுக்குத் தெரியாது. அவ்வாறே அருவமாய சிவ சக்தியும் கண்ணுக்குத் தெரிவதில்லை. எமது பாவனைக்காக நிலையத்திற் சேமிக்கப்படும்போது மின்குமிழ் ஒன்று உருவாகிறது. இந்த மின்குமிழை இறைவனது உருவத்திருமேனியாக உருவகிப்போம். மின்னாளி அழுத்தப் பட 'மின்ஒளி' தருகிறது. ஆனால் ஒளி யூடுருவும் மின்சக்தி கண்ணிற் படுவதில்லை. மின்னாளி கட்டளை யிடும் போதுதான் புவியிருள் அகன்று ஒளிபரவுகிறது. (தொடரும்..

உ

# தந்தை

செல்வன் கு. குணாளன்

"சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே" என்றும் "தந்தையோடு கல்விபோம்" என்றும் பெரியோர் கூறியதை மிகவும் கூர்ந்து நோக்குங்கள்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற தெய்வப்புலவரின் வாக்கிற்கேற்பத் தன் மகனைப் பேரறிஞனாக்கி பிறர் போற்றும் வித்தகனாக விளங்கவைப்பது ஒரு தந்தைக்குரிய கடமைகளுள் மிகவும் முக்கியமானதாகும்.

தந்தை ஆனவர் எம்மைக் கண்டிப்பதும், தண்டிப்பதும் எமது நன்மைக்கே எனப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் எண்ண வேண்டும். விளையாட்டுப் பருவமான இளமைக் காலத்தை வீணே கழிக்கலாகாது. அப்படி இளமைக் காலத்தை வீணாகப் போக்கிய ஒருவன் பிற்காலத்தில் பெரிதும் கவலை அடைய நேரிடும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற காலத்திலேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை ஆகிய பாதகனே"

மேற்படி பாடல்மூலம் பிற்காலத்தில் பிள்ளைகள் எண்ணி, எண்ணி மனம் வருந்தியவராய்த் தந்தையை குறை கூறவேண்டியவர்களாவார்கள். தந்தை சொற்கேளாது இளமையில் வீணே பொழுது போக்கும் ஒவ்வொரு பிள்ளையும் பிற்காலத்தில் மனம் வருந்தியே தீரவேண்டும். ஆனால் சென்றகாலம் மீண்டும் வாராது என்பது நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும். வருந்தி அழைத்தாலும் சென்ற இளமைக்காலம் மீண்டும் எமது வாழ்நாளில் வாராது என்பது முற்றிலும் உண்மை. எனவே நாம் ஒவ்வொருவரும் தந்தையின் சொற்படி இளமைக்காலத்தில் நன்கு கல்வி பயின்று தந்தைக்குப் புகழ் தேடிக்கொடுக்கும் பிள்ளைகளாக வாழப்பழகிக் கொள்ளவேண்டும். சில பிள்ளைகள் தந்தையைக் குறை கூறிக்கொள்கிறார்கள். தந்தை தவறான வழியில் நடக்கிறார். நாமும் ஏன் அப்படி நடக்கக் கூடாது என்ற தவறான எண்ணம் உருவாகிறது. அப்படி பிள்ளைகளின் மனத்தில் உருவாகக் கூடாது. பிள்ளைகள் நல்லவழியில் நடந்தால் பிழையான கருத்துக்களைக் கொண்ட தந்தையும் திருந்தி நல்வழியில் வாழ்வார் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தந்தை எம்மைவிடப் பெரியவர்.

எனவே நாம்தான் பணிந்து நடந்து பெற்றோரை விடப் பிள்ளை அறிவுடையவனாக விளங்கவேண்டும். இதற்கு உதாரணமாக

"தந்தை பத்து அடிபாய்ந்தால் தனயன்
பதினாறடி பாயவேண்டும்."

என எமது முன்னோர்கள் கூறுவது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அதற்காகத் தவறான செயல்களைச் செய்யவேண்டும் என்பது இதன் கருத்தல்ல. மேலும் மகன் தந்தையிலும் பெரிய தகுதியைப் பெறவேண்டும்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
எந்நோற்றான் சொல் எனும் சொல்."

அதாவது ஒரு பிள்ளையைப் பிறர்பார்த்து இவனது தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ என புகழ்ந்து வியக்கும் வண்ணம் பிள்ளைகள் ஆகிய நாம் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

எனவே தந்தையிடும் உத்தரவுகளைத் தலைமேல் தாங்கி அவர் உள்ளம் உவக்குமாறு நன்கு பயிலவேண்டும். ஏனெனில் "தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை." தந்தையின் சொல்லை எவன் ஒருவன் மதித்து நடக்கிறானோ அவனுக்கு வாழ்வில் எந்த இடரும் வராது. எதிலும் வெற்றிபெற்றுச் செல்வான் என்பதில் சந்தேகமே கிடையாது.

சலவைத் தொழிலாளி சேலையைக் கல்லில் மோதுவது கிழிப்பதற்கல்ல, அழுக்கைப் போக்கவே ஆகும். அதுபோல் பிள்ளைகளாகியவர்களைத் தந்தை கண்டிப்பதும், தண்டிப்பதும் எம்மை வருத்தவல்ல. எதிர்காலத்தில் இவ்வுலகில் பலரும் போற்றும் உத்தமர்களாக வாழவேண்டும் என்பதற்கே எம்மை எல்லாம் கண்டித்து வளர்க்கிறார். பிள்ளைகள் தம்மைத் தண்டித்து வளர்க்கும் தந்தைமீது கோபம் கொள்ளக்கூடாது. இன்றுமுதல் ஆவது எம்மைக் கண்டித்து வளர்க்கும் தந்தைமீது கோபம் கொள்ளாது அவர் செய்யும் செயல் எம்மை நல்வழிப்படுத்தவே என நினைத்து அவரை மதித்து நடக்கப் பழகிக் கொள்வோமாக.

ஆச்சிரமப் பணிகளுக்கு உதவிபுரிய விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்**
**க. இ. P 7481**
**இலங்கை வங்கி**
**பருத்தித்துறை**
*தொலைபேசி இலக்கம் 021- 2263406*

உ

(தொடர்ச்சி..

# யார் இந்த (ச்) செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்

## ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்

## குருநாதரின் சமாதி

சுவாமிகள் முற்றும் துறந்த தவ வாழ்வினர். மண், பெண், பொன் எனும் மூவாசைகளிலிருந்தும் அடியோடு நீங்கியவர். அவருக்கு வாழ்வில் தன்னுடைமையென்று எதுவும் இருந்த தில்லை. ஓர் நாலு முழவேட்டியை இரண்டாக மடித்து அதனை அரையில் கட்டிக்கொள்வர். இவையிரண்டுமே இவரது உடமைகளாக இருந்தன. கையில் ஒரு சதமேனும் அவர் வைத்தி ருக்கும் வழக்கமுடையவருமல்லர். யாராவது பணம் கொடுத்தால் தனக்குத் தேவையான பொருட்களை கடையில் வாங்கிக் கொள்வார். பணம் மீதமிருக்குமானால் கடைக்காரரிடமே விட்டுவிட்டுத் தன்பாட்டில் போய்விடு வார். இத்தகையவொரு உயர்நிலைத் துறவியை நாம் இக்காலத்தில் காண்பது அரிது. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டவரல்லர். உடலாலும் உள்ளத்தாலும் முற்றும் துறந்தவர். அவர் அம்மையாரை நோக்கிக் கூறிய கருத்துக்கள் அவரது உள்ளத் தூய்மையைக் காட்டுகின்றன. அவர் அம்மாவைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். "அம்மா நீ காவியுடுத்து மான் தோல் போட்டுக்கொண்டு இருந்து சுவாமி காட்ட வேண்டாம். இவ்விடத் தில் உள்ள மற்றப் பெண்களைப் போல இருந்துகொள். நான் உன்னைக் காட்டவேண்டிய இடத்தில் காட்டுவன்" எனவுணர்த்தி, "நீ இந்த ஆச்சிரமத் திற்கு ஒரு மடங்கட்டி அத்வைத ஞான குருபீடம்" என்று பெயர் எழுதிப் போடு, என்று கூறினார். இதைக்கேட்ட அம்மை யார், "சுவாமி நான் அதிகம் படியாத வள், உங்கள் திருவருளையே நம்பி வெளிக்கிட்டவள். யாராவது பெரியவர் வந்து அத்வைத ஞான குருபீடம் என்று போட்டிருக்கு, இதற்கு விளக்கம் என்ன வென்று கேட்டால் நான் என்ன சொல் வேன்? என்று கேட்க, சுவாமிகளும், கேட்கவரும்போது நீ சொல்லத்தயாரா யிருப்பாய் பிறகென்ன என்று கூறி அவரது மனத்தளர்ச்சியைப் போக்கினார்.

சுவாமிகளின் இக்கூற்று வெறும் கூற்றல்ல என்பதையும் இது வார்த் தைக்கு வார்த்தை உண்மையானதை யும், பின்பு காண்போம்.

மேலும் சுவாமிகள் ஆசிரமக் குடில் அமைந்துள்ள இடமாகிய கைதடியைப் பற்றிக் குறிப்பிடுகையில், கைதடியில் முள்ளும் புதர்களும்தான் அதிகம். முட்செடிகளும் மரங்களும்

செறிந்து நிலம் பல இடங்களிலும் பண்படுத்தப்படாமல் கிடக்கிறது. அதைப்போல கைதடி மக்கள் பலரின் உள்ளம் பண்படாமல் இப்பொழுது முட்புதர் மண்டிக் கிடக்கிறது. (இப்பொழுது, 1958- 59 ஆண்டுகாலப் பகுதியில்) காலப்போக்கில் இன்னும், சில ஆண்டுகளின் பின் அவர்களின் உள்ளங்களும் பண்பட்டுவிடும் என்பதே எனது கருத்து. இறைவனே கதியென்று மற்றைய இன்பங்களை யெல்லாம் கைவிட்டு வெளியேறிய சிவனடியார்களை நிந்திக்கிறார்கள். இது சிவசிந்தனையல்லவா? மனம் நொந்து சுவாமிகள் மேற்படி கருத்தை வெளியிட்டுப்பின்னரும் கூறுவார். மகான்களின் பாதம் கைதடி மண்ணில் பதிந்து வருகிறது. இதனால் காலப்போக்கில் இது பண்பட்டுப் பல மகான்களின் சமாதி நிலையங்களை அடையும் பேறுபெறும் என்றும் கூறினார்.

சுவாமிகள் தமது தேக நீக்கத் திற்குச் சில தினங்கள் இருக்கையில் தம்முடன் தொடர்பு கொண்டிருந்த அன்பர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதினார். "இத்தேகத்தை வைத்துப் பார்த்தவர்கள் கடைசி நேரத்தில் ஒரு முறை வந்து பார்த்துவிட்டுப் போகட்டும்" என்று அம்மையாரிடம் கூறினார். தேக நீக்கம் என்பது அவருக்கு ஒரு விளையாட்டாகவே இருந்தது. ''பழைய துணியைக் களைவது போல" அவர் தன்னுடலைக் களையத் தயாராகி வந்தார்.

தேகத்தின் அழிவு என்பது எப்படிப்பட்டது என்பதனை ஆதிசங்கரர் விவேக சூடாமணியில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஒரு மரத்தின் இலையும் பூவும் பழமும் அழிவது போல் உடல் இந்திரியம் பிராணன், புத்தி ஆகியவற்றின் அழிவு ஆனந்தமே. உருக்கொண்டதும் ஸ்த்தேயாகியதுமான தன்னுடைய ஆத்மாவிற்கு ஒருபோதும் அழிவில்லை. அதுவோ எனின் மரத்தைப்போல் இருக்கிறது.

சுலோகம் 560.

இவ்வனுபவம் ஒருவன் வாழும் காலத்திலேயே அனுபூதியாக வேண்டும். அத்தகைய அனுபூதியை சுவாமிகள் பெற்றிருந்தார். இத்தகைய அனுபூதி பெற்ற சுவாமிகளின் நிலை எத்தகையதாக இருக்கும்? மீண்டும் ஆதிசங்கரரின் விவேக சூடாமணி பின்வருமாறு விளக்கம் கூறுகின்றது.

பிராரப்த கர்மம் ஞானிகளும் வெல்லமுடியாத வலிவுடையது. அனுபவத்தால்தான் அதனுடைய அழிவு சேமித்து வைக்கப்பட்ட முன்வினைக்கும் இனி வருவனவற்றிற்கும் தெளிந்த ஞானமாகிற தீயால் அழிவு ஏற்படுகிறது. பிரம்மமும் ஜீவனும் ஒன்று என்பதை ஸாக்ஷித்கரித்து அதுவாகவே அவர்கள் எப்பொழுதும் நிலைபெற்றவர்களோ அவர்களுக்கு அது மூன்றுமே ஒரு பொழுதும் நிச்சயமாக இல்லை. அவர்கள் நிர்க்குணப் பிரம்மமேயாகிறார்கள். சுலோகம் 453.

தேக நீக்கத்திற்கு ஒருசில தினங்கட்கு முன்பு சுவாமிகளுக்கு வயிற்றோட்ட நோய் கண்டது. "ஷஷ சாட்டில்லாமல் சாவில்லை" என்பார். சுவாமிகளிற்கு ஏற்பட்ட நோயின் தன்மை கண்டு அன்பர்கள் கவலைப் பட்டனர். பல வைத்தியர்களிடமும் காண்பித்தனர். ஒன்றுக்கும் நோய் கட்டுப்படவில்லை. தைமாதப் புனர் பூசத்தினத்தில் தேகநீக்கஞ் செய்ய உறுதி கொண்டுவிட்ட சுவாமிகளோ சிரித்தபடி, "குரு கடமையைச் செய்து முடியுங்கோ" என்று கூறி அன்பர்களின் எண்ணத்திற்கு விட்டுவிட்டார். கடைசியாக அம்மையார் தம் பங்கிற் குச் சுவாமிகளை யாழ் தர்மலிங்கம் வைத்தியசாலையில் அனுமதித்தார். சுவாமிகள் இங்கு தங்கியிருந்து வைத்தியம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. இவ்வாறிருக்கையில் சுவாமிகள் தேகம் விடுவதாகக் கூறிய 1960ம் ஆண்டு தைமாதம் புனர்பூசத் தினமும் வந்தது. இன்று சுவாமிகளின் பூவுலக வாழ்வின் 35ம் வருடமும் பூர்த்தியாகும் தினமாகவிருந்தது.

அன்று இரவு பத்மாசனம் போட்டபடி சுவாமிகள் சுவரில் சாய்ந்த படி கட்டிலொன்றின் மீது இருந்தார். அம்மையார் அவரெதிரில் நிலத்தில் அமர்ந்திருந்தார். அப்போது சுவாமிகள் "அம்மா தேகம் விடுகிற நேரம் வருகுது, உனது குறைகளையெல் லாம் சொல்லு" என்று கூறியதும் அம்மையார் மிகுந்த அழுகையினூடே பின்வருமாறு கூறினார். "நான் சுவாமி யின் திருவருளே கதியென நம்பி வெளிக்கிட்டவள். சுவாமி மறைந்து விட்டால் எனக்கு என்ன கதியுள்ளது? என்னைச் சுற்றத்தவரும் கைவிட்டு விட்டார்கள். அக்கா தங்கம்மாவுமோ கைம்பெண் எனது நிலை என்ன ஆகுமோ? என்பதுதான் எனது கவலை" எனக் கவலையுடனும் வருத்தத்துடனும் முறையிட்டார். சுவாமிகள் அம்மை யாரை நோக்கி "அம்மா! ஒன்றுக்கும் நீ வருந்த வேண்டாம். சுவாமி தேகத்தை மாத்திரம் விடுவதேயன்றி உன்னை விட்டு எங்கும் போவதில்லை. ஆக வேண்டியதெல்லாம் வேண்டும் பொழுது தந்தேயாகும். சுவாமியின் விசேட கருமங்கள் யாவும் எக்காலத்திலும் அதிவிமரிசையாகவே நடைபெறும். நீ இந்த இடத்தில் ஒரு பெரியவளாகவும், பெரும் ஐசுவரியவாட்டியாகவும் மற்றை யோரால் போற்றப்படுவாய் தற்போது நீ இருக்கும் நிலையில் ஏதாவது பொருள் வசதியீனம் ஏற்பட்டால் ஊருக்கு வெளியே போய் யாசி. இங்கு உனக்கு வேண்டியன யாவும் கிடைக்கச் சுவாமி ஆவன செய்வதோடு, அப்படி அனுசரிப்பவர்கள் "தாயே! எப்போதும் எங்களிடமும் வந்து போகவேண்டும்" எனவும் கேட்பார்கள். ஆனால் எக்கார ணங்கொண்டும் உன்னை ஏளனஞ் செய்த உறவினர்களிடம் உதவி கேட்டுச் செல்லாதே. மகன் மணியத்தை உனக்குப் பக்கபலமாகவும் உதவியாக வும் சுவாமி ஏற்படுத்தித் தந்திருக்கு ஆகவே அவனைப் பிள்ளைபோல் கவனி" என்று கூறினார். (தொடரும்..

(தொடர்ச்சி..

உ

# 01-08-2004இல் இருந்து
## நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| செ. நவரத்தினராசா J.Pமூலம் ஜெகதீஸ்வரன் தர்மவதனி | லண்டன் | 8000. 00 |
| திருமதி கௌரி சுரேசன் விரிவுரையாளர் | ஆவரங்கால் | 1000. 00 |
| சி. செல்வரெத்தினம் J.P | சிறுப்பிட்டி | 1000. 00 |
| காசி விஸ்வநாதன் | கரணவாய் | 1000. 00 |
| சி. கிருஸ்ணபிள்ளை J.P | ஆவரங்கால் | 1000. 00 |
| சீவரெத்தினம் பாலசுப்பிரமணியம் (சுவீஸ்) | ஏழாலை மேற்கு | |
| நா. உமாகாந்தன் மூலம் அரிசி, மரக்கறி (பொருட்கள்) | | 20,000. 00 |
| நா. பகீரதன் 3ம் சந்தி, | தொண்டைமானாறு | 2000. 00 |
| மழவராசா அன்னசத்திரம் - | புத்தூர் 1மூடை அரிசி | 1000. 00 |
| M. செந்தில்கிரி | லண்டன் | 1000. 00 |
| தா. பிரதாபன் | இடைக்காடு | 1000. 00 |
| ஸ்ரீ நதியா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சிவசோதி | கோண்டாவில் கிழக்கு | 1மூடை அரிசி |
| சி. பத்மநாதன் லண்டன் க. கு. க மூலம் | யாழ்ப்பாணம் | 3மூடை அரிசி |
| ஓம் சரவணா 5ம் குறுக்குத்தெரு, | கொழும்பு | 1மூடை அரிசி |
| வே. துரைசிங்கம் அதிபர் | வல்வெட்டித்துறை | 1மூடை அரிசி |
| க. சத்தியதாஸ் | சிறுப்பிட்டி | 1மூடை அரிசி |
| ஞா. மாலினி | அச்சுவேலி | 4000. 00 |
| செ. கௌரி - தெகிவளை, | கொழும்பு | 1000. 00 |
| செல்வி அபிராமி தங்கேஸ்வரன் தெகிவளை, | கொழும்பு | 5000. 00 |
| செ. ஈஸ்வரன் தெகிவளை, | கொழும்பு | 1000. 00 |
| செ. செந்தூரன் தெகிவளை, | கொழும்பு | 1000. 00 |
| அ. குமாரவேல் | காரைநகர் | 1000. 00 |
| நா. புஸ்பராசா | சுழிபுரம் | 1500. 00 |
| வி. லோகேந்திரன் | கனடா | 10,000. 00 |
| திருமதி நேசரெத்தினம் | லண்டன் | 5000. 00 |
| விஜி பூங்கோதை - பிரப்பங்குளம் | யாழ்ப்பாணம் | 15,000. 00 |
| ம. நாகேஸ்வரி | நவிண்டில் | 2000. 00 |
| வேல்முருகன் களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஸ்ரீதரன் | சித்தங்கேணி | 1மூடை அரிசி |
| சிவா அரிசிஆலை முதலாம்கட்டை, | பருத்தித்துறை 2மூடை அரிசி | 2000. 00 |
| B.R. ரஞ்சன் B.A தம்பிஓழுங்கை, | வண்ணார்பண்ணை | 1மூடை அரிசி |


| | | |
|---|---|---|
| சிவராமலிங்கம் - இராமலிங்கம்வீதி, | திருநெல்வேலி | ½ மூடை அரிசி |
| பவளராஜா இணுவில் (நீபா ஜிவல்லறி கொழும்பு) | | 3மூடை அரிசி |
| கற்பகராசா இலங்கை வங்கி | கொள்ளுப்பிட்டி | 2மூடை அரிசி |
| மலர்ஸ் கதிரவன் | நெல்லியடி 2மூடை அரிசி | 1000. 00 |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | 10,000. 00 |
| க. அருணகிரிநாதர் | சுழிபுரம் | 5000. 00 |
| T. சண்முகவரதன் (அவுஸ்திரேலியா) | தொண்டைமானாறு | 18,000. 00 |
| K. துரைராஜா | தொண்டைமானாறு | 7000. 00 |
| பஞ்சலிங்கம் அருந்தவராணி | நவக்கிரி | 2000. 00 |
| ந. ஜெயரெட்ணராஜா | மாதகல் | 2000. 00 |
| நா. குமாரசிங்கம் மூலம் சந்திரராணி | கனடா | 6250. 00 |
| பாலசுப்பிரமணியம் ராஜிவன் | அளவெட்டி | 5000. 00 |
| ச. சுந்தரலிங்கம் | வேலணை | 5001. 00 |
| சி. தெட்சணாமூர்த்தி மாரியம்மன்வீதி | திருநெல்வேலி | 2000. 00 |
| சு. பவிதரன் | கொழும்பு | 2000. 00 |
| சாமினா இளங்குமரன் (கனடா) தோப்பு | அச்சுவேலி | 1000. 00 |
| திருமதி முத்துராஜா | கெருடாவில் | 1000. 00 |
| கா. கேசவன் மஞ்சத்தடி | இணுவில் 1மூடைஅரிசி | 500. 00 |
| ம. இராசமணி | சிறுப்பிட்டி மேற்கு | 500. 00 |
| A. மக்ஸ் மிலன் | கரவெட்டி | 2000. 00 |
| திருமதி வீரவாகு | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| Dr.K தியாகராஜா சந்நிதி கிளினிக் | வவுனியா | 2000. 00 |
| R. செல்வலிங்கம் | கொழும்பு -6 | 3000. 00 |
| கந்தஞானி பகீரதிஅம்மா | பத்தமேனி | 2000. 00 |
| S. தியாகலிங்கம் | பருத்தித்துறை | 3000. 00 |
| கைலாசபதி | கொழும்பு | 1000. 00 |
| அஜித் | இடைக்காடு | 500. 00 |
| ச. வைத்தியநாதக்குருக்கள் (பிரதமகுரு) | பொலிகண்டி | 2000. 00 |
| ஏ. இராசநாதன் | ஆவரங்கால் | 3000. 00 |
| சி. செல்வநாயகம் பிருத்தி ஜிவல்லறி | கொழும்பு | 3000. 00 |
| கோ. பத்மநாதபிள்ளை வவுசல்தெரு | கொழும்பு | 2500. 00 |
| ச. ராமநாதன் நாயன்மார்கட்டு | யாழ் | 1000. 00 |
| லிங்கம் கூல்பார் | யாழ்ப்பாணம் | 10,000. 00 |
| குமரகுரு | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| இந்திரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 50 டொலர் |
| மயூரன் பிரசன்னா அந்திரான் | கரவெட்டி | 4000. 00 |
| Dr. பொன் சின்னத்தம்பி பொலிகண்டி (மருந்துவகை) | | 7000. 00 |

உ

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்
(மகாபாரதத்திலிருந்து)

# தானத்தின் மேன்மை

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்



அஸ்வமேத யாகம் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தமையினாற் களிப்புற்றிருந்த அனைவரும் யாக சாலையில் கீரி ஒன்று நுழைவதனைக் கண்டு அதிசயித்தனர். அதுமட்டுமன்றி அக்கீரியின் உடலின் ஒருபகுதி பொன்னிறமானதாக ஒளிவிட்டிருந்தமையைக் கண்டு மேலும் அதிசயித்து இருந்த வேளையில் கீரி மானுடமொழியில் பேசமுற்பட்டது. "மன்னர்களே! இங்கு நடந்து முடிவடைந்த அஸ்வமேத யாகத்தையிட்டு நீங்கள் பெருமை கொண்டிருக்கிறீர்கள். இங்கு இடம் பெற்ற தானதர்ம சிறப்புக்களை எல்லாம் விஞ்சும் வகையில் ஏழைப் பிராமணர் ஒருவர் தானம் செய்து

மேன்மை அடைந்திருக்கிறார். இதனால் இங்கு நடைபெற்ற தானங்களையிட்டு நீங்கள் பெருமிதம் கொள்ளமுடியாது. அவ்வேழைப் பிராமணரின் வரலாற்றைக் கூறுகிறேன் கேட்பீர்களாக" என்று கூறிவிட்டுக் கீரிப்பிள்ளை பிராமணரின் வரலாற்றைக் கூறத் தொடங்கியது.

சிறந்த கொடையாளி எனக் கருதப்படும் ஏழைப்பிராமணரான அவர் குருஷேத்திரத்தில் வாழ்ந்து வந்தார். அவர் செய்த தானத்தின் பயனாய் அவரும் அவரது மனைவி, மகன், மருமகள் ஆகிய நால்வரும் சொர்க்கத்தை அடைந்து நித்திய பேரானந்தத்தில் வாழ்கிறார்கள். நான் நேரிற்கண்டு வியப்படைந்த அச்சம்பவத்தைக் கூறுகிறேன் கேட்பீர்களாக. தரும சிந்தையும் தவஒழுக்கமும் நிறைந்த அப்பிராமணர் உஞ்சவிருத்தி செய்து வாழ்ந்து வந்தார். நிலத்தில் வீழ்ந்து கிடக்கும் தானியங்களை மட்டுமே பொறுக்கி எடுத்து அவற்றைச் சேகரித்து உணவு தயார் செய்வது அவர்களது வழக்கம். ஒவ்வொரு நாளும் காலை எழுந்து நித்திய கர்ம அனுஷ்டானங்களை முடித்துவிட்டு நால்வரும் சென்று தானியங்களைச் சேகரித்துப் பின் அவற்றை உணவாக்கி விருந்தினர் வந்தால் அவர்கட்கும் வழங்கி மீதமிருப்பதைப் பிற்பகல் வேளையில் அருந்தி உறங்கச் செல்வதே அவர்களின் வழக்கமாக இருந்தது.

இவ்வாறு இவர்கள் வாழ்ந்த காலத்தில் மழைஇன்மையாற் பஞ்சம் ஏற்பட்டது. இவர்கட்குத் தானியம் கிடைப்பதும் கடினமாகியது. இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறைதான் இவர்கள் உணவருந்துவது வழக்கமாயிற்று. இவ்வாறு இவர்கள் ஒருநாள் பிற்பகலில் கிடைத்த சோளத்தானியங்களை மாவாக்கி அதனை வெறுமனே உண்பதற்கு ஆயத்தமாகிய வேளையில் இன்னுமோர் பிராமணர் தானத்துக்காக இவர்களின் வீட்டுவாயிலில் வந்து நின்றார். விருந்தினர் வந்திருக்கிறார் என்பதனைப் புரிந்துகொண்ட அவர்கள் அவரை அன்புடன் வரவேற்று ஆசனமளித்து அவரை வணங்கி உணவருந்துமாறு வேண்டிக்கொண்டனர். அவர்கள் நால்வரும் கிடைத்திருந்த ஒருபடி சோளம்மாவைக் கால்வாசிவீதம் உண்பதற்கு பிரித்து வைத்திருந்தனர். முதலில் பிராமணர் தமது கால்வாசி மாவை வந்திருந்த பிராமணருக்கு உண்ணுமாறு அளித்தார். அம் மாவானது அவருக்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பதனை உணர்ந்துகொண்ட அவரின் மனைவி தனது பங்காக இருந்த காற்பங்கு மாவை அதிதியாக வந்திருந்த பிராமணருக்கு அளித்தாள். அதிதியும் அதனை மிக்க மகிழ்வுடன் உட்கொண்டபோதும் அவரின் பசி அடங்கவில்லை. அவரது பசி தீராமையால் உஞ்சவிருத்திப் பிராமணர் கவலையடைந்த வேளையில் அவரது மைந்தன் தனது பங்கை அதிதிக்கு அளிக்க முன்வந்தார். அதிதிப்பிராமணரும் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு புசிக்கலானார். அவரின் பசி

தீரவில்லை. இதனைக் கவனித்துக் கொண்டிருந்த மருமகள் தனது பங்கையும் அதிதிக்கு அன்புடன் சமர்ப் பித்தாள். அவ்வுணவை உண்டபோது அவரின் பசியும் தீர்ந்தது. மகிழ் வடைந்த பிராமணர் தம்மை நன்கு உபசரித்துத் தன் பசிப்பிணி போக்கிய உஞ்சவிருத்திப் பிராமணரையும் அவரது குடும்பத்தவரையும் நோக்கி "அந்தணர் குல திலகமே உமது நிலையில் நீர் பெரும் பசியுடன் இருந்த வேளையிலும் அதிதி பூஜை செய்வதில் நீர் மிகவும் மகிழ்வுடன் ஈடுபட்டு எம் பசி போக்கினீர். உமது பலனை எதிர்பாராத தானத்தினால் நான் மிகவும் மகிழ்வடைகிறேன். பசி வரும் போது ஒருவன் தனது அறிவை இழக்கிறான். தர்ம நியாயங்களை மறக் கிறான். மனிதர்கள் தைரியத்தையும் மனோதிடத்தையும் இழக்கிறார்கள். பசியானது மனிதனை மனித நிலையில் இருந்தும் மாற்றிவிடுகிறது. அத்தகைய கொடிய பசியின் பிடியில் இருந்தும் நீர் தருமசிந்தையுடன் அதிதிபூஜை யைச் சிறப்பாகச் செய்திருக்கிறீர். ஒருவனுக்குப் பெருஞ்செல்வம் கிடைப் பதும் அரிது. அதனிலும் அரிது கிடைத்த செல்வத்தை நல்வழியில்த் தானம் செய்வது. பெரும் பொருள் படைத்தவன் செய்யும் தானத்திலும் பார்க்க ஏழையாய் இருப்பவன் கொடுக்கும் ஒருபிடி அன்னம் பல மடங்கு உயர்ந்தது. பெரும் யாகங்க ளும் ஹோமங்களும் செய்வதனாற் கிடைக்கக்கூடிய பெரும்பேற்றை நீரும் உமது குடும்பத்தவரும் அடைந்து விட்டீர்கள். இதோ உங்களுக்காக சொர்க்கத்தின் கதவுகள் திறந்திருக் கின்றன. சென்று இன்பமடையுங்கள்" என்று ஆசீர்வதித்துவிட்டுப் பிராமணர் மறைந்தருளினார்.



இவ்வாறு பிராமணரும் அவர் குடும்பத்தவரும் சொர்க்கத்தை அடைந்ததும் அவ்விடத்திற் சிந்தி இருந்த மாவை உண்ணும் பொருட்டுச் சென்ற என் உடலில் அம் மாவு பட்டதனால் எனது உடலின் ஒருபகுதி பொன்னிறமாகியது. எனது மறுபாதி உடலைப் பொன்னிறமாக்கக் கருதி யாகங்கள் வேள்விகள் நடக்கும் இடமெங்கனும் செல்கிறேன். எனது உடல் மாறும் வகையில் தானம் எதுவும் நடைபெறவில்லை. தருமபுத்திரர் யாகம் செய்கிறார் என்று அறிந்து இங்கு வந்து எனது உடலைப் பொன்மயமாக்கலாம் என்று நினைத்து இங்கு வந்தேன். இங்கும் என்னுடல் தங்கமயமாக மாறவில்லை. எனவே இந்த யாகமும் பிராமணர் அளித்த ஒருபடி மாவுக்கு ஈடாகாது" என்று கூறியவாறு கீரிப்பிள்ளை மறைந்துவிட்டது. இதனைக் கேட்ட பாண்டவர் முதலானோர் திக்குப்பிரமை அடைந்தனர். தாம் செய்த யாகத்தில்

** நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் தீர ஆலோசிக்க வேண்டும். **

தானத்தின் அளவு பெரிதென மகிழ்ந் திருந்த பாண்டவர் மனக்கவலை அடைந்தனர். யாகம் முடிந்ததும் கண்ணபிரானும் விடைபெற்றுத் துவாரகையை அடைந்தார்.

இங்கே கீரிப்பிள்ளையின் கூற்றாகத் தான தர்மங்களின் இயல்புகள் நன்றாக எடுத்துரைக்கப் பட்டள்ளன. வலதுகை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்பது தானத்தின் இயல்பு. ஆனால் இன்றைய வாழ்வில் இந்நிலை உள்ளதா? தான தர்மங்கள் செய்யும் போது கர்வம் ஏற்படக்கூடாது என்பதும் தர்மங்களின் இலக்கணம். தானம் செய்ய வேண்டும் என்பதற்காகவே தான தர்மங்கள் செய்யப்பட வேண்டும். செய்வதுதான் மனித இயல்பு என்று உணர்ந்து செயற்பட வேண்டும். தானங்கள் தர்மங்கள் செய்வது எமது சக்தி. அதாவது எமது செல்வநிலை, சூழ்நிலை என்பவற் றைக் கருத்திற் கொள்ளாது தேவைக்கு ஏற்பத் தானதர்மம் செய்ய வேண்டும். பெரும் செல்வக் குவியல் உடையவர்தான் தானம் செய்ய வேண்டும் என்பதிலும் பார்க்கத், தேவைகள் ஏற்படும் இடத்திற் கால மறிந்து செய்யப்படும் தானம் மகத்து வமானது என்பதனை இங்கே நாம் உணரமுடிகிறது. தாகமற்றவனுக்கு நீரின் அருமை புரியாது. பசியற்ற வனுக்கு உணவு தேவைப்படாது. பசித்தவனுக்கு உணவும் தாகத்துக்கு நீரும் வழங்கப்படுவது அளவு சிறிது எனினும் பயன் மிக்கதாகிறது. தான தர்மங்களின் நுட்பங்களை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதனை நாம் உளம் கொண்டு நடக்க முயல்வோமாக. (தொடரும்...

## ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் அறப்பணிகள்.

- தொண்ணூற்று நான்கு முன்பள்ளிகளைச் சார்ந்த சிறார்களுக்கு நாளாந்த சத்துணவு வழங்கல்
- வாரத்தில் மூன்று நாட்கள் மருத்துவ சேவையினை வழங்குதல்.
- நோயாளருக்குரிய மருந்துவகைகள் ஆச்சிரமத்தால் இலவசமாக வழங்குதல்.
- உயர்கல்வி கற்கும் வசதியற்ற மாணவர்களுக்கு உபகாரநிதி வழங்குதல்
- ஏதிலிகளாக வாழும் 54 குடும்பங்களுக்கு மாதாந்த நிவாரண உதவி அளித்தல்
- அநுராதபுரம் விவேகானந்த சபையினால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியருக்கு மாதாந்த ஊதியம் வழங்குதல்
- நீர்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைத் தொண்டர் ஆசிரியர் இருவருக்கு மாதாந்த நிதி உதவி வழங்குதல்.

அதிகமான பழக்கம் அவமரியாதையைத் தரும்.

உ



# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

திருமூலரின் திருமந்திரத்திலே திருவடிப்பேறு பற்றிய பதினைந்து பாடல்களும் குருவினால் ஆட்கொள் ளப்பட்ட நிலையை விரிவாக விளக்கு கின்றன. இப்பாடல்கள் அனைத்துமே படித்துப் பயன்பெறவேண்டியவை.

சென்ற கட்டுரையில் குரு சிரசின்மேல் கை வைத்ததும் அவரது பாதம் மனதிலே பதிந்த நிலைபற்றிப் பாடிய பாடல்களைப் பார்த்தோம். மேலும் ஓரிரு பாடல்களில் அவர் கூறியவற்றை தொடர்ந்து நோக்கலாம்.

அவரது தூல, சூக்கும, காரண உடல்களைக் குருவானவர் கைக்கொண்டு, குருதேவர் சின் முத்திரையாக அரிய மெய்ப்பொருளை உபதேசம் செய்து, இறைவனது அடியிலே உருகிட வைத்து அவரை உய்வித்து ஆட்கொண்டதாகத் திரு மூலர் பாடியுள்ளார்.

கையிலுள்ள ஐந்து விரல்களில் சுட்டுவிரல் பெருவிரலுடன் மற்ற மூன்று விரல்களையும் விட்டு, சேர்ந்து நிற்கும் முத்திரை, மும்மலங்களையும் விட்டு விலகி, ஆன்மா இறைவனுடன் ஐக்கியப்பட்டால் முக்திப்பேறு கிட்டும் என்பதை உணர்த்துகின்றது. இதையே சிவபிரான் கல்லால மரத்தின்கீழ் தட்சணாமூர்த்தியாகவிருந்து உப தேசித்தார்.

குரவன் உயிர்முச் சொருபமும் கைக்கொண்டு
அரிய பொருள்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்று
உருகிட என்னைஅங்கு உய்யக்கொண் டானே

என்பதே முற்கூறிய கருத்தைக்கூறிய திருமந்திரமாகும்.

இதன் இரண்டாம் அடிக்கு 'அரிய உயிரைக் குருவினிடம் பொருந்தும்படி செய்து' என்றும் பொருள் கூறுவர்.

குரு அவரை ஆட்கொண்டு உய்வடையச் செய்கிறார். அந்த வேளையில் பெரியபிரானடியில் பேச்சற்று உருகுகின்றார். திருமூலர், திருவடிப்பேறு பற்றிய மற்றொரு திருமந்திரத்திலே இதே நிலையை -

உரையற்று உணர்வற்று உயிர்பரம் அற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்து

என்று மேலும் விளக்கிப் பாடியுள்ளார். பேச்சில்லாது போவது மட்டுமல்ல, உணர்வுமற்று, தான் என்ற நிலைகெட்டு, நிர்ச்சலனமான நீர்போல் இருந்ததாகக் கூறியுள்ளார்.

** பகைமையை அன்பினால்த்தான் வெல்லமுடியும். **

ஆட்கொள்ளப்படும் போது ஏற்படும் நிலைபற்றி ஒவ்வொருவரும் அங்குமிங்குமாகச் சில விடயங்களைக் கூறினாலும் அந்த நிலையை விளக்குவது கடினமென்பதே உண்மையாகும்.

"இதயத்திலும் பார்வையிலும் சிரசிலும் தனது பாதத்தைப் பதிவித்த பராபரன் முக்திக்கு வழிகாட்டியவாறையும் மெய்ப்பொருளைக் காட்டிய வகையையும் அதற்கான விதியை வகுத்தவாறையும் விளக்கிக்கூற முடியாது" என அவர் பாடியுள்ளார்.

இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்
விதிவைத்த வாறும் விளம்பஒண் ணாதே

என்பது திருமந்திரம்.

இதற்கு 'எனது ஆத்மாவிலும் பார்வையிலும் எனது சிரத்தின் மீதும் திருவருளைப் பதிவித்த பராபரனாகிய குருவானவர் கீழ்முகமாகச் சுருண்டு கிடந்த குண்டலினியை ஊர்த்துவகதியாக அமைந்தருளியதும், எம்முறையில் விந்து நாதங்கள் தொழிற்படுமோ. அம்முறையில் உணர்த்தியருளியதும் சொல்லி விளங்கவைக்க முடியாததாகும்' என்றும் பொருள் கூறுவார்கள்.

எந்த வகையில் பொருளை எடுத்துக்கொண்டாலும் இறைவனால் அல்லது குருவாக எழுந்தருளும் பரம்பொருளால் ஆட்கொள்ளப்படும்போது ஏற்படும் அனுபவங்கள் அற்புதமானவை. அவற்றை சொல்லி விளங்கவைக்க முடியாது. சொல்லவே முடியாது என்றுதான் கூறவேண்டும். பதினைந்து பாடல்களில் திருவடிப்பேறு பற்றிக்கூறிய திருமூலர் அப்படிக்கூறி விளக்குவது கடினமென்பதையும் கூறிவிட்டார்.

அறநெறிச் சிந்தனை- 03

**பெற்றோரை வணங்கு**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆன்றோர் வாக்கு அனுபவ உண்மை
உன்னை ஈன்று ஆளாக்கி விட்டு
இன்னும் உன்தன் உயர்ச்சியை எண்ணி
இறக்கும் வரைக்கும் பித்தாய் வாழும்
அன்புப் பெற்றோர் தம்மை வணங்கு
அவனியில் நீயும் சிறப்புடன் வாழ்வாய்

*-கவிஞர் வ. யோகானந்தசிவம்-*

** பேருக்காகவும் புகழுக்காகவும் ஒன்றும் செய்யாதே. **

உ

# செய்திக் கொத்து

☞ ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் பெற்றோர்களை இழந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், யாழ் மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்கள் ஆகியோருக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள "சிவபூமி" நிறுவனத்தினரால் நிதி நன்கொடைகள் வழங்கப்பட்டன.

☞ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியின் வித்தியாரம்ப தினவிழாவும், மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 11.05.05 புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வோடு இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 11 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது.

☞ நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வயது முதிர்ந்த கலைஞர்களை கௌரவிக்கும் விழா இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. முதிய கலைஞர்களுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளன.

☞ நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப்பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் மிகவும் சிறப்பான முறையில் 15.05.05இல் நடைபெற்றன.

☞ வருடந்தோறும் கதிர்காம உற்சவத்தின் நிமித்தம் நடைபெறும் பாதயாத்திரை 11.05.05 புதன்கிழமை செல்வச்சந்நிதி முருகனது அனுக்கிரகத்தோடு சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து அமெரிக்க நாட்டவரான பற்றிக்கரிகன் வழிகாட்டலில் பல அடியார்கள் புடைசூழ பாதயாத்திரை ஆரம்பமானது.

☞ இவ்வருடம் வெளியிடப்படவுள்ள நல்லைக் குமரன் 13ஆவது மலர்வெளியீட்டிற்கான ஆக்கங்களை 30.05.05முன் அனுப்பிவைக்குமாறு சைவசமய விவகாரக்குழு கல்விமான்களையும், சைவப்பெரியோர்களையும் கேட்டுள்ளது.

☞ வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் ஏற்பாட்டில் கடந்த 21ம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையும் சேவை வாரமாக அனுட்டிக்கப்பட்டது. இச்சேவை வாரத்தில் சேவா நிலைய ரீதியாக பொது மக்களுக்கான பல சேவைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உ

# நக்கீரரின் இரு நூல்கள்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள்

பதினோராம் திருமுறையில் நக்கீரர் அருளியனவான பல நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி என்னும் நூல்கள் எல்லோரதும் கவனத்துக்கு உரியனவாகக் காணப்படுகின்றன. திருவெழுகூற்றிருக்கை 55 வரிகளைக் கொண்ட ஒரு பாடலும் ஒரு வெண்பாவும் கொண்டதாக உளது. 55 வரிகள் கொண்ட பாடலில் "சிறியேன் சொன்ன அறிவில் வாசகம் வறிதெனக் கொள்ளாயாகல் வேண்டும்" எனும் பகுதி உள்ளது. இதில் உள்ள வெண்பா

பணிந்தேன்நின் பாதம் பரமேட்டி பால்நீறு
அணிந்தாலவாயில் அமர்ந்தாய் - தணிந்தென்மேல்
மெய்யெரிவுதீரப் பணித்தருளு வேதியனே
ஐயுற வொன்றின்றி அமர்ந்து

என்றிருக்கிறது.

ஒரு பாண்டியமன்னனின் சந்தேகத்தைப் போக்கவும் தருமி என்னும் அந்தணப் பிரமச்சாரிக்கு உதவவும் எனச் சிவபெருமான் பாடிய பாடலுக்கு நக்கீரர் குற்றம் சொன்னார் என்பதும் சிவபெருமான் நெற்றிக்கண்ணைக் காட்டியபோதும் நக்கீரர் தன் கருத்தை மாற்றாமையால் நெற்றிக் கண்பார்வையால் சுட்டார் என்பதும் சூடு தாங்கமாட்டாத நக்கீரர் மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் விழ ஏனைய சங்கப் புலவர்கள் ஆலவாய்ப்பெருமானைப் பிரார்த்திக்க நக்கீரருக்கு சிவபெருமான் அருள் புரிந்தார் என்பதும் திருவிளையாடற்புராணம் கூறும் வரலாறாகும். இவ்வரலாற்று அடிப்படையில் நக்கீரரும் சிவபெருமானைத் தோத்திரம் செய்தமுறையில் இங்கு எடுத்துக்காட்டிய பகுதிகள் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. சிவபெருமானே நான் கூறிய குற்றங்களை அறிவில்லாதவனின் கருத்தற்ற வாசகங்களாக அலட்சியப்படுத்துக. என்மீது கொண்ட கோபத்தை நீக்கி உம் கோபத்தால் என் உடலில் உண்டாகிய வேதனை நீங்கும்படி அருள் புரிக என்ற பொருளை பாடற்பகுதியும் வெண்பாவும் உடையதாயிருப்பதை அவதானிக்குக. இதே போல பெருந்தேவபாணி எனும் நூலிலும் "கூடல் ஆலவாய்க் குழகன் ஆவதறியாது அருந்தமிழ் பழித்தனன் அடியேன்" எனும் பகுதியும்

விரைந்தேன்மற்றெம் பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தேன் அடியேன் - விரைந்தென் மேற்

கடும் சொல்லே கூரிய வாள்.

சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதிதேவனே
ஆற்றவும் நீ செய்யும் அருள்.

எனும் வெண்பாவும் காணப்படுகின்றன.

இப்பகுதிகளும் முதலில் உள்ளன போலவே உள்ளன. இப்பகுதியில் ஒரு புதிய கருத்தும் காணப்படுகின்றது. திருவிளையாடற் புராணத்தில் உள்ளது போல சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் காட்டியபின் குற்றம் கூறவில்லை என்பதும் சிவபெருமான்தான் பாடலைப் பாடியவர் எனத் தெரியாதுதான் நக்கீரர் குற்றம் சொல்லியிருக்கின்றார் என்பதும் சிவபெருமான் என்று தெரியாது குற்றம் சொன்னாலும் குற்றமற்ற பாட்டைக் குற்றம் சொன்னதால் சிவபெருமான் கோபத்துக்காளாகித் துன்புறவேண்டி வந்தது என்றும் தெரிகின்றது. பெருந் தேவபாணியின் பாடற்பகுதியில் "கூடல் ஆலவாய்க் குழகன் ஆவதறியாது அருந்தமிழ் பழித்தனன்" என்றிருப்பது பெறுமதியுடையதாகும். இதே போல் வெண்பாவிலும் ''பிழைத்தேன் அடியேன்" "சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதிதேவனே" என்ற பகுதிகள் கவனத்துக்குரியன. இவை இவ்வள வில் நிற்க.


பெண்களின் கூந்தலுக்கு மணமில்லை என்று நக்கீரர் கூறியதும்; நக்கீரர் கூறியது சரியே என அறிஞருலகம் நம்புவதும் தவறு. எப்படியெனில் மனித உடம்பு ஐம்பூதச் சேர்க்கையானது. ஐம்பூதத்தில் மண் ஒன்று. மண்ணின் குணம் நாற்றம் (வாசனை) என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. மனித உடம்பில் மயிர்ப்பகுதிகளை மண்ணின் தொடர்பன எனலாமேயன்றி ஏனைய நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பூதத்தொடர்புடையது எனல் பொருந்தாது. எனவே மயிர் மணமுடையது. மயிரை நெருப்பிலிட மணம் வெளிப்படுவதை அறிக. இம் மணம் நல்லொழுக்கம், கற்பு, தேவத்தன்மை என்பவற்றால் நறுமணமாதல் இலக்கிய சாத்திட உடன்பாடேயாகும்.

**இறைவனின் அருளைப் பெற....**

'இறைவன் தனது அடியாருக்காக எதைத்தான் செய்யமாட்டான்' என்கிறீர்கள்! உண்மை. முதலில் நாம் இறைவனின் அடியாராக ஆக வேண்டும். அவனிடம் பக்தி செலுத்த வேண்டும். பக்தி என்பது சாதாரணமான விஷயமன்று. மனம், வாழ்க்கை எல்லாவற்றையும் இறைவனிடம் சமர்ப்பிக்க வேண்டும். நீங்கள் இதையெல்லாம் செய்யவில்லையென்றால், பின் இறைவன் உங்களுக்காக ஒன்றை ஏன் செய்யவேண்டும்? அவரும் பொருட்படுத்துவதில்லை. இறைவனை அடையவில்லை என்று நீங்கள் துன்பப்படுவீர்களேயானால், அவர் உங்களுக்கு அருகில் இருக்கிறார் என்று நிச்சயம் செய்து கொள்ளுங்கள். அவரது தரிசனம் விரைவில் கிடைக்கும். நீங்கள் அளவில்லாத பேரின்பம் அடைவீர்கள்.

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



மருதர் கதிர்காமர் கதிர் காமத்திற்கு அழைக்கப்பட்டதும் அங்கே வழங்கப்பட்ட வேல் சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைத்து வழிபடப்படுவதும் நாம் அறிந்த விடயங்களாகும். அத்துடன் மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்தவர்களே அன்று தொடக்கம் இன்றுவரை உண்மையான விசுவாசத்துடன் சந்நிதியில் பூசைகளை நடாத்தி வருவதும், இந்த பூசைகள் மௌன மொழியில் நடாத்தப்பட்டாலும் மிகவும் கீர்த்தி நிறைந்ததென்பதும் நாங்கள் அனைவரும் உணர்ந்த விடயங்களாகும்.

தற்பொழுது மருதர்கதிர்காமர் வழித்தோன்றல்களான இரண்டு பேண்

களை கலியுகக்கந்தன் கதிர் காமத்திற்கு அழைத்து முன்பு மருதர் கதிர்காமருக்கு வழங்கிய வேலைப் போன்று ஒரு வேலை அந்தப் பெண் களிடம் வழங்கி அதனை சந்நிதியில் வைத்து வழிபடுமாறு கூறியுள்ள இன்னொரு திருவிளையாடல் நிகழ் வினை அடியார்களுடன் இந்த மலரில் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

2004ஆம் ஆண்டு கந்தசஷ்டி முடிவடைந்து சில நாட்கள் சென்று விட்டன. சந்நிதி ஆலயத்தின் மடப் பள்ளியுடன் இணைத்து அமைக்கப் பட்டிருக்கும்திருப்பணிக் காரியாலயத் தில் அந்த இளம்பெண் திருப்பணிக் காக அன்பர்கள், அடியார்கள் வழங்கும் திருப்பணிநிதியினைப் பெற்று அதற்கான பற்றுச்சீட்டுக்களை வழங்கும் தனது பணியை வழமை போல ஆற்றிக்கொண்டிருந்தார்.

இவ்வாறான தனது வழமை யான பணியை அவர் மேற்கொண் டிருந்தாலும் அவருடைய உள்ளுணர் வான சிந்தனையும் செயற்பாடும் கதிர்காமக் கந்தனிடம் செல்வது பற்றி யதாகவே இருந்தது. மருதர்கதிர்காமர் வழித்தோன்றலாக வந்த சிவானந்த ஐயர் செல்வறோசா என்ற அந்தப் பெண்ணைப் பொறுத்தவரை கதிர்காமம் செல்வதென்பதும் அவர் நிறைவேற்ற வேண்டிய நேர்த்திக் கடனை நிறை வேற்றுவதென்பது பொதுவாக சராசரி (அடியவர் ஒருவரால் மேற்கொள்ளப் படுகின்ற கைங்கரியங்களாகக் கொள்ளமுடியாது) இவர் கதிர்காமம் செல்வதென்பது சாதாரண நிலை களையெல்லாம் கடந்த பக்தியின் உச்சக்கட்டமான ஒரு விடயமாகும். இவர் ஒரு அபூர்வமான எண்ண அலை களினால் கதிர்காமக் கந்தனுடைய வழிபாட்டிற்காக துடித்துக்கொண் டிருந்தார் என்பது ஏனையவர்களால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும்.

ஆம் இவ்வாறு செல்வி செல்வ றோசா அவர்கள் கதிர்காமம் செல்ல வேண்டும் என்ற உணர்வையும் கதிர்காமக் கந்தனைச் சென்று வழிபட வேண்டுமென்ற பக்தியையும் அவரால் கட்டுப்படுத்த முடியாது ஒவ்வொரு கணப்பொழுதையும் கதிர்காமக்கந்த னின் நினைவுடனேயே அவர் கழித்துக் கொண்டிருந்தார். இவ்வாறான ஒரு பக்திநிலையில் அவர் மூழ்கியிருக்கும் பொழுது தான் அவர் கடமையாற்றும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய திருப்பணிக்காரியாலயத்திற்கு அந்த சுவாமிகள் வந்து சேர்ந்தார்கள்.

அந்த சுவாமிகள் தான் கதிர்காமத்திலிருந்து வருவதாகவும் நீங்கள் கதிர்காமத்திற்கு வந்தால் அங்கே தான் சகல உதவிகளையும் செய்வதாகவும் கூறியதுடன் தான் தங்கியிருக்கின்ற கதிர்காமத்துக்குரிய விலாசத்தையும் செல்வி செல்வறோசா சிவானந்தஐயரிடம் அந்தசுவாமிகள் வழங்கினார்கள்.

செல்வி செல்வறோசா அவர்கள் தான் கதிர்காமம் செல்லும் நிலையில் தான் ஒரு இளம் பெண்ணாக இருக் கின்ற காரணத்தால் பாதுகாப்பாக தங்குவதற்கும் செயற்படுவதற்கும் என்னசெய்வதென்று குழம்பிப்போய்

இருந்த சூழ்நிலையில் இவ்வாறான ஒரு வசதிகிடைத்தது, அவர் கதிர்காமம் செல்வது தொடர்பாக பெரிய மகிழ்ச்சியையும், தைரியத்தையும் ஏற்படுத்தியது. எனவே செல்வி செல்வறோசா அவர்கள் அடுத்த நாளே கதிர்காமம் செல்வதற்கு திட்டமிட்டார்.

கதிர்காமக்கந்தனது உற்சவத் திற்கு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தி லிருந்து வேல்செல்லும் நிகழ்வு சந்நிதி யான் ஆச்சிரமத்துடன் இணைந் திருக்கும் அரசமரத்தடியிலிருந்தே வழி அனுப்பப்படுவதை அடியார்கள் அறி வார்கள். இந்த அரசமரத்தடியிலிருந்து கதிர்காமம் என்ற பெயர்ப்பலகையுடன் தொடர்ச்சியாக பல பஸ்வண்டிகள் கதிர்காமம் செல்வதை சந்நிதியான் செல்வறோசாவுக்கு ஏற்கனவே கனவில் காட்டியதன் மூலம் எவ்வாறு கதிர்காமத்திற்கு வரவேண்டுமென்ற விடயத்திற்கு பஸ்வண்டியினூடாகவே கதிர்காமத்திற்கு பிரயாணம் செய்யலாம் என செல்வறோசா ஏற்கனவே தீர்வுகண்டுவிட்டார். தற்பொழுது கதிர்காமத்திற்கு சென்றவுடன் அங்கே சகல உதவிகளைப் பெறுவதற்கும் கதிர் காமத்திலிருந்து வந்த சுவாமிகள் மூலம் வழிபிறந்துவிட்டது. இப்பொழுது எஞ்சியிருப்பது இளம் பெண்ணான தான் யாருடைய துணையுடன் கதிர்காமம் செல்வது என்ற பிரச்சனை மட்டுமே.

இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு இவருக்கு நீண்டநேரம் எடுக்கவில்லை. இதைப்பற்றிச் சிந்தித்த பொழுதே திடீரென்று இவரது சிந்தனை யில் நாம் கடந்த இரண்டு மலர்களிலும் குறிப்பிட்ட அம்மையாரது ஞாபகம் மனதில் தோன்றியது. மருதர் கதிர்காமருடைய வழித்தோற்றலான அந்த அம்மையாரிடம் சென்று தான் கதிர்காமம் செல்லவேண்டுமென்றும் தன்னுடன் துணையாக வருமாறும் கேட்டபொழுது அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார்.

இந்த சம்மதத்தை செல்வ றோசாவுக்கு அம்மையார் தெரிவித்தார் என்பதைவிட உண்மையில் சந்நிதி யானுடைய அருட்கட்டளையாலேயே இந்தச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது என்பதையும் இவ்விடத்தில் நாம் குறிப் பிடுதல் வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்பு மேற்படி அம்மையாருடன் பழகுகின்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்ன அம்மன் என்ற பெண் சந்நிதி ஆலயத்தில் வைத்து இவரை கதிர் காமம் வருமாறு கேட்டபொழுது அம்மையார் மறுத்துவிட்டார். அப் பொழுது அந்தப் பெண் அம்மை யாரைப் பார்த்து நீ கதிர்காமம் வருவதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டாய் வீட்டிற்கு சென்றபின் உனக்கு எல்லாம் விளங்கும் எனவும் கூறியுள் ளார். அம்மையார் அதனைப் பெரிது படுத்தாது வீட்டிற்கு சென்றுவிட்டார். அங்கே தயாராக வைத்திருந்த அப்பம் சுடும் மாவை எடுத்து வழமைபோல அப்பம் சுட்டு தனது சுவாமி அறையில் உள்ள சந்நிதியானுக்கு அதனைப் படைத்தபின் அவ்வாறு படைத்த

நல்லொழுக்கத்தால் துயரங்கள் அழிகின்றன.

அப்பங்களைத் தான் அருந்தியபொழுது அப்பங்கள் முழுவதற்குள்ளும் மண் கடிபட்டதனால் அந்த அப்பங்களை சாப்பிடமுடியாதநிலை ஏற்பட்டது. இதன் பின்பு எஞ்சியிருந்த அதே மாவை எடுத்து மீண்டும் அப்பத்தை சுட்டு அதனை அவர் அருந்திய பொழுது அதற்குள் எந்தவிதமான வித்தியாசமும் தெரியவில்லை. மிகுதி யாக உள்ள அதே அப்ப மாவைக் கொண்டு சுட்ட அப்பத்துக்குள் மண் எதுவுமே தற்பொழுது கடிபடவில்லை. ஆம் அங்கே சந்நிதி ஆலயத்தின் வள்ளி அம்மன் வாசலிலே வைத்து அந்தப் பெண் அம்மையாரை கதிர் காமம் வருமாறு தன்னைக் கேட்டது சாதாரண ஒரு பெண்ணுடைய அழைப்பு அல்ல. அது உண்மையில் கதிர்காமக் கந்தனது அழைப்புத்தான் என்பதை அன்றே உணர்ந்து கொண்டார்கள்.

இந்நிலையில்த்தான் செல்வ றோசா அவர்கள் அம்மையாரைக் கதிர் காமம் வருமாறு அழைத்த அழைப்பை கதிர்காமக் கந்தனது அழைப்பாகவே எண்ணி அதற்கு உடன்படவேண்டிய சூழ்நிலை அம்மையாருக்கு ஏற்பட்டது.

இவ்வாறு எல்லா வகையிலும் செல்வறோசா அவர்களது கதிர்காமப் பயணத்திற்கான முன் ஆயத்தங்கள் எல்லாவற்றையும் சந்நிதியானே கச்சித மாக ஒழுங்குபண்ணியிருந்த நிலை யில் 07-11-2004 ஞாயிற்றுக்கிழமை செல்வறோசாவும் அம்மையாரும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தி லிருந்து தமது கதிர்காம யாத் திரையை ஆரம்பித்தனர்.

இரண்டு பெண்களும் தனியாக மேற்கொண்ட மேற்படி யாத்திரையில் பல பிரச்சினைகளை அவர்கள் எதிர் நோக்கவேண்டியிருந்தாலும் அடுத்த நாள் திங்கட்கிழமை மாலை கதிர் காமத்தைச் சென்றடைந்தனர். அங்கே யும் பெரும் பான்மைச் சமூகத்தவர் களான சிங்கள மக்களே அதிகளவில் காணப்பட்டதால் உண்மையில் அவர்கள் பய உணர்வுடனேயே காணப் பட்டனர். ஆனாலும் தமக்கு சகல உதவிகளையும் செய்வதற்கு ஆயத்த மாக உள்ள சுப்பிரமணியச் சுவாமி களைச் சந்தித்தவுடன் தமது இவ்வா றான பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு கதிர்காமக் கந்தனை மனம் குளிர வழிபடப்போகின்றோம் என்ற எதிர்பார்ப் பும் நம்பிக்கையும் அவர்களுக்கு பெரிய நிம்மதியை அளிப்பதா யிருந்தது.

கதிர்காமத்தில் தெய்வானை அம்மன் ஆலயத்தில் பூசை செய்கின்ற பூசகர் கிருஷ்ணகுமாரசர்மா அவர் களையும், அந்த ஆலயத்தில் தங்கி யிருக்கின்ற யோகசுவாமிகளையும் அந்த ஆலயத்தில் இவர்கள் முதலில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த சந்திப்பு இவர்கள் இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இவர்களிடம் தாம் வந்த நோக்கத்தைக் கூறியதுடன் தமக்கு ஆதரவளித்து உதவிசெய்வதாகக்கூறிய அந்த சுவாமிகளுடைய இடத்தை காண்பிக் குமாறு தாம் கொண்டு சென்ற அந்த விலாசத்தைக் காண்பித்தனர். இந்த விலாசத்தைப் பார்வையிட்ட கிருஷ்ண

குமாரசர்மா என்ற அந்தப் பூசகரும் யோசுவாமிகளும் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தனர். ஆம்! கதிர்காமத்தில் சுப்பிரமணிய சுவாமிகள் என்று யாருமே இல்லை என்றும் அதேபோன்று தெய்வானை அம்மன் கல்யாண மண்டபம் என்றும் எதுவும் இல்லை என்ற உண்மையை வெளிப் படுத்தினார்கள். அதேநேரம் இப்படிப் பட்ட ஒருவரை நம்பி யாழ்ப்பாணத்தி லிருந்து தனியாக கதிர்காமம் வந்த இவர்களுடைய அறியாமையையும் இவர்களுக்கு எடுத்துக்கூறினார்கள்.

ஆனாலும் செல்வறோசா என்ற அந்த இளம்பெண்ணினதும் அந்த அம்மையாரதும் பரிதாபநிலையை உணர்ந்துகொண்ட அந்த இருவரும் தாம் அவர்களுக்கு அபயமளித்து வேண்டிய உதவிகளைச் செய்வதாகக் கூறிக்கொண்டார்கள்.

இவ்வாறு எதிர்பார்த்து வந்த சுவாமிகள் தொடர்பாக இவர்கள் பெரிய ஏமாற்றமடைந்தாலும் கதிர் காமக் கந்தனை வழிபடப்போகின்றோம் என்ற பெரிய மனநிறைவு அவர்களுக்கு ஏற்பட்டது. அன்று அதாவது திங்கட் கிழமை மாலையில் மாணிக்க கங்கை யில் நீராடியபின் கதிர்காமக் கந்தனை வழிபடுவதற்காக கந்தப்பெருமானு டைய ஆலயத்திற்குள் பிரவேசித்தனர்.

அங்கே கந்தப்பெருமானது ஆலயத்தில் இவர்களை எதிர்பார்த் திருப்பது போன்ற உணர்வலைகளுடன் ஒரு இளைஞன் காணப்பட்டான். இவர்கள் என்றுமே பார்த்திராத அந்த இளைஞன் அடிக்கடி இவர்களை உற்றுநோக்கித் தான் தேடுகின்றவர்கள் இவர்கள் தானா என்பது போன்ற உணர்வுகளுடன் இவர்களுக்காகவே காத்திருந்தவன் போலவும் இவர்களை அடையாளம் கண்டுவிட்டவன் போல வும் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்...

(தொடரும்...

## தியானம்

வேலையில்லாத ஒருவனுக்கு வருடமுடிவில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு விடுமுறை கொடுத்தால் அந்த விடுமுறையால் எந்தவித மகிழ்ச்சியையோ அல்லது பயனையோ அவன் அடையப்போவதில்லை. ஆனால் வருடம் முழுவதும் கஷ்ரப்பட்டு வேலைசெய்பவர்களுக்கு வருடமுடிவில் முழுச்சம்பளத்துடன் விடுமுறை வழங்கும்பொழுது அது அவர்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்து மீண்டும் கடினவேலையை செய்வதற்கு ஏற்றவகையில் அவனை ஊக்குவிக்கின்றது. அதேபோலத்தான் நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபடுபவர்களுக்கே தியானம் என்பதும் பயனைக்கொண்டுள்ளதாக அமைகிறது. முழுநாளும் சோம்பேறியாக வாழ்கின்ற ஒருவனுக்கு தியானம் என்பது அவசியமற்றதாகவும் பயனற்றதாகவும் இருப்பதைக்காணலாம்.

-சுவாமி றெற்கானந்தா-

⁂ கடமை உன்னுடையது பலன் ஆண்டவனுடையது. ⁂

உ

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

03-06-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

சொற்பொழிவு:- "நெஞ்சக் கன கல்லு"

வழங்குபவர்:- நா. நவராஜ்

("உளவளத் துணையாளர்" யாழ்ப்பாணம்)

10-06-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## மாணவர்கள் நிகழ்வு

(ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்)

17-06-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)

வழங்குபவர்:- அ. குமாரவேல்

(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

24-06-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## ஆனி- 2005

வெளியீட்டுரை:- பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்

(பிரதமகுரு வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)

மதிப்பீட்டுரை:- க. நவரெத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

ஜனவரி
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட் உற்சவம்.

பெப்ரவரி
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

மார்ச்
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

ஏப்ரல்
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

மே
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

ஜூன்
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

ஜூலை
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

ஆகஸ்ட்
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

செப்ரெம்பர்
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

ஒக்ரோபர்
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

நவம்பர்
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

டிசம்பர்
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005